விமோசனம்.

தொகுதி 1	சுக்லஹ பங்குனிமீ	பகுதி 8

குடிப்பது பாவம்



மகாத்மா காந்தி

போர் துவக்கம்

மகாத்மா காந்தி பாரத நாட்டின் விடுதலைக்காக சத்தியாக்கிரஹப் போர் தொடங்கி விட்டார். 1921-ம் வருஷத்தில் நடந்தது போல இவ் வருஷமும் தேசமெங்கும் விடுதலைப் போர் நடக்கப்போகின்றது. தமிழ் நாட்டாரும் இப்போரில் தீவிரமாக ஈடுபட்டு மகாத்மாவுக்குத் துணை நிற்கவேண்டும். ஜனங்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து இவ்வருஷத்திற் குள் கள்ளரக்கனை ஒழித்து வெற்றிக் கொடி நாட்ட வேண்டும்.

மகாத்மா காந்தி தாம் இப்பெரிய போர் துவங்குவதற்குரிய காரணங்களை விளக்கி இராஜப்பிரதிநிதிக்கு முடிவான கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார். அதில் உப்பு வரி, நிலவரிக் கொடுமைகளையும், இவ்வரிகளினால் ஏழை ஜனங்கள் நசுக்கப்பட்டு வருவதையும் சொல்லி விட்டுக் கள்ளு சாராய வரியைப் பற்றி அடியிற் கண்டபடி குறிப்பிட்டிருக்கிறார் :—“ கலால் வருமானமும் ஏழைகள் கொடுக்கும் வரியேயாகும். மதுவியாபாரம் ஜனங்களின் தேக சுகம், ஒழுக்கம் இவ்விரண்டையும் வேருடன் பறித்துவருகிறது. வருமானத்தை முன்னிட்டு, வேறு பொய்க்காரணம் சொல்லிக்கொண்டு, இவ்வியாபாரத்தை அரசாங்கத்தார் நடத்தி வருகிறார்கள்.”

இப்படி ஏழைகளைக் கொடுமைப்படுத்தி வசூலிக்கப்படும் வரிப்பணம் எல்லாம் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ஏராளமான சம்பளம் கொடுப்பதற்கும், மற்ற வீண் செலவுகளுக்குமே பயன் படுகிறது என்பதையும் அக்கடிதத்தில் மகாத்மா எடுத்துக் காட்டியிருக்கிறார்.

சென்னை மாகாணத்தில் ஏழைகளைப் பெரிதும் நசுக்கி வரும் தீமை கள்ளு வியாபாரமே யாகும். இந்தியாவில் வேறெந்த மாகாணத்திலும் கலால் வருமானம் இவ்வளவு அதிகம் இல்லை. ஆதலின் தமிழ் நாட்டில் நாம் சத்தியாக்கிரஹப் போர் நடத்தி மதுபானக் கடைகளை யொழித்து விடவேண்டும்.

விடுதலையா? கள்ளா?

எது வேண்டும்?

நாட்டில் பெரிய போர் தோடங்கியிருக்கிறது. ஒரு கட்சியார் விடுதலை வேண்டுமென்று சண்டையிடுகிறார்கள். மற்றொரு கட்சியார் கள்ளுக்கடை வேண்டுமென்று போராடுகிறார்கள். நீங்கள் எந்தக் கட்சியில் சேருவீர்கள் ?

"வீரசுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ."

வேண்டாம்

[பிரசங்கபூஷணம் பு. பா. இரத்தினசபாபதி நாயகர்]

ஒருபோதும் கள்ளதனைக் குடிக்க வேண்டாம்
உணவாகும் அவையெனவே நினைக்க வேண்டாம்
விருப்போடும் அதைக்கரத்தில் தொடவே வேண்டாம்
விடம்நிறைந்த பாம்பதுகாண் நெருங்க வேண்டாம்
மருள்சேர்ந்த மதுவகைகள் மாந்த வேண்டாம்
மரணநிலை தருமவற்றை மதிக்க வேண்டாம்
அருள்பெருகும் கண்ணனருள் கீதை போதம்
அருந்திடுநீ யென்ஞான்றும் வாழு வாயே. (1)

மதுபானம் இன்பமென உரைக்க வேண்டாம்
மதியழிக்கும் துன்பமதில் மயங்க வேண்டாம்
சதிகார உருவதனைச் சார வேண்டாம்
சாபம்தரப் பெரியோர்கள் கோர வேண்டாம்
நிதியழிய வாயிலதை ஊற்ற வேண்டாம்
நீசமது வாமதனை யேற்க வேண்டாம்
அதிதாயள் அவ்வையருள் நீதி போதம்
அருந்திடுநீ யென்ஞான்றும் வாழு வாயே. (2)

நடைப்பிணமாய் நாறியப்பா திரிய வேண்டாம்
நாவரண்டு விழிசிவந்து எரிய வேண்டாம்
உடைமைகளை யொழித்துவிட்டு உணங்க வேண்டாம்
உற்றாரை உதைத்துதைபட் டூற வேண்டாம்
உடைநீக்கி உருட்டுமது உண்ண வேண்டாம்
ஊரனைத்தும் உறுமலிட்டு உளைய வேண்டாம்
அடைவோடும் அத்தனருள் கீதை போதம்
அருந்திடுநீ யென்ஞான்றும் வாழு வாயே. (3)

நேரான அளவிதெனக் குடிக்க வேண்டாம்
நேர்மையிலா கள்குளத்தில் குதிக்க வேண்டாம்
சாராயப் புட்டிதனைச் சார வேண்டாம்
சாகவைக்கும் லாகிரியால் வருந்த வேண்டாம்
தீராத பிணிகளுன்னைத் தீர்க்க வேண்டாம்
தீயவனும் இவனெனப்பேர் தேட வேண்டாம்
ஆராய்ந்து ஆதியருள் கீதை போதம்
அருந்திடுநீ யென்ஞான்றும் வாழு வாயே. (4)

யாருக்கு அக்கரை?

[க. ச.]

ஊரில் ஒருவனுக்குக் காலரா கண்டால் அதை யகற்றுவது யாருடைய கவலை? பிளேக் வந்த வீட்டிலிருக்கும் சாமான்களை என் கொளுத்துகிறோம்? காலரா கண்டவன் பாடு, பிளேக் வீட்டுக் காரனுடைய இஷ்டம், என்று சும்மாயிருக்கலாமா?

வைத்திய நிபுணர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம்; ஒரு தேசத்தில் வறுமையும் நோயும் அதிகமா யிருந்தால் அவைகளால் பிரத்தி யட்சமாகக் காணப் படும் தீமைகளைவிட நம் கண்ணுக்குப் புலனாகாத தீமைகளே மிகக் கொடியவை என்று. பலர் மாண்டு போவதாலுண்டாகும் நஷ்டத்தைவிட, மற்றும் அநேகர் வலிமை குன்றி வாழ்க்கை யின்பத்தை இழப்பதே அதிகம் வருந்தத் தக்கதாகும். தாய்மார்களும் குழந்தைகளும் ஜீவசக்தி குன்றி அத்தேசத்தின் வருங்கால வாழ்வுக்கு ஏற்படும் பாதகமே எல்லாவற்றிலும் கொடிய தீங்கு. குடியின் தீமையும் இப்படியே தான்.

குடியினால் குடிகாரனும் அவன் குடும்பமும் நாசமாவது பிரத்தியட்சமாய் அனைவர்க்கும் தெரியும் தீமை. இதைப்பற்றிச் சந்தேகமே எவருக்கும் இருக்கமுடியாது. குடியினால் குடிக்காதவர்களுக்கு ஏற்படும் தீமைகளை இவ்விடம் கவனிப்போம்.

1. பயம். குடிகாரர்களிருக்கும் ஊரில் பயமின்றி வாழ்வதெப்படி? கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றனர் பெரியோர். 'குடி' உள்ள ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று நாம் சேர்த்துக் கொள்ளலாம். போலீஸாரை நம்பிக் குடிகாரனை அலட்சியம் செய்வது, தடியை நம்பி நல்ல பாம்பை வீட்டிற்குள் விடுவதுபோலாகும். கிணற்றுத் தண்ணீரை நம்பிக் கூரையில் நெருப்பு வைப்போமா?

2. நோய். இரும்புக் கம்பியானது தனக்கு அருகில் போகும் மின்சாரத்தைத் தன்னிடம் இழுத்துக் கொள்கின்றது. அது போலவே குடிகாரன் சுற்றுப் பக்கங்களிலுள்ள நோய்களைத் தன்னிடம் இழுத்துக் கொள்வான். குடி அவனுடைய தேகத்தை எல்லா விதத் தொற்று நோய்களுக்கும் பக்குவமாகச் செய்திருக்கின்றது. அவன் கிரகிக்கும் நோய்களை மற்ற ஜனங்களுக்குத் தாராளமாக வழங்குவதற்கு ஏற்பட்ட தர்ம சத்திரங்கள் கள்ளு, சாராயக் கடைகளாகும்.

3. கவலை. நம்முடைய முன்னோர்களின் சமயப்பற்று, ஜாதிக் கட்டுப் பாடு முதலியவைகளின் பலனாக நம்மில் பலர் குடிப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தப்பியிருக்கிறோம். மதாசாரங்களும், ஜாதிக் கட்டுப்பாடு களும் குறைந்துவரும் இந்நாளில், நமது சந்ததிகளும் இப்படியே தப்பிப் பிழைப்பார்கள் என்பது என்ன நிச்சயம்? தன் மகன் குடித்துக் கெட்டுப் போக இடமிருக்கும்போது எவனாவது நான் தான் குடிக்க வில்லையே யென்று கவலை யற்று இருக்க முடியுமா?

4. ஒழுக்கக் கேடு. மற்ற எல்லாத் தீமைகளிலும் இதுவே கொடியதாகும். குடிகாரன் மனத்தைச் சாராயம் கெடுப்பது போல், அநியாய லாபத்தில் ஆசை குடியாதவன் மனத்தைக் கெடுக்கிறது. ஏழை ஜனங்களைக் காப்பாற்ற வேண்டிய சர்க்கார் கலால் வருமானத்திற்காக அவர்களைப் படுகுழியில் ஆழ்த்துவதோடு, இந்த அநியாயத்தை ஆதரிப் பதற்கு விதண்டா வாதங்கள் சொல்லுகிறார்கள். கள்ளைக் கண்ணால் பார்க்கவும் சகியாத மிராசுதார்கள் தங்கள் தென்னை மரங்களைக் கள்ளுக் குத்தகைக்கு விடுகிறார்கள். தங்கள் மரத்தில் உண்டாகும் கள்ளைத் தாங்களும் கொஞ்சம் குடிக்க வேண்டுமென்றால், அவர்கள் மரத்தையே வெட்டி விட மாட்டார்களா? ஆயினும் சொந்த லாபத்தை உத்தேசித்துத் தங்கள் சகோதரர்கள் நாசமடைவதை அவர்கள் கவனிப்பதில்லை. இது போலவே கிராமங்களில் உள்ள பிரமுகர்களும், பணக்காரர்களும், கள்ளு சாராயக் கடைகளைக் குத்தகை எடுக்கிறார்கள். சமூகத் தலைவர்கள் இவ்வாறு பணத்தாசையினால் தங்கள் சகோதரர்களை அழிக்க முற்படும் போது, சமூகம் எவ்வளவு ஒழுக்கக்கேடு அடையும் என்று சொல்ல வேண்டியதில்லை. கள்ளில் வரும் அநியாய லாபம் சமூக நலத்தின் வேரையே அழித்து விடுவதாகும்.

இக் காரணங்களினால் குடியை யொழிப்பது குடிகாரன் இஷ்ட மென்றாவது, குடிகாரனுக்குத் தான் அதில் அக்கரை யென்றாவது சொல்லுவது அறியாமை. குடிகாரனின் சம்மதத்தின்பேரில் தான் கள்ளு, சாராயக் கடைகளை மூட வேண்டுமென்றால், பூனையைக் கேட்டுத் தான் பாலை மூடவேண்டும்; புலியைக் கேட்டுக்கொண்டுதான் ஆட்டைப் பட்டியில் அடைக்க வேண்டும்; மூதேவியின் அநுமதி பெற்றுத் தான் ஸ்ரீதேவியின் அருள் தேடவேண்டும்.

குடியை ஒழிப்பது குடிப்பவர்களின் நன்மைக்காக மட்டுமன்று; குடியாதவர்களின் க்ஷேமத்துக்கும் அது இன்றியமையாதது.

ஜாலக்காரன்

I

யாதவபுரம் என்னும் நகரம் ஒன்று இருந்தது. அந்நகரில் பல வகைக் கைத்தொழில்கள் செழித்தோங்கி யிருந்தபடியால், ஜனங்கள் எவ்விதக் குறைவுமின்றி சுகமாய் வாழ்ந்து வந்தார்கள். வறுமை, வியாதி, சண்டை, கலகம், அகால மரணம் முதலிய துன்பங்கள் அந்நக ரில் தலைகாட்டுவதில்லை. எவரும் சோம்பியிருப்பது கிடையாது. கல்வி, செல்வம், ஆரோக்கியம் முதலிய சகல நன்மைகளும் அந்நகரில் குடி கொண்டிருந்தன. எல்லாருக்கும் நல்ல வருமானம் கிடைத்தபடியால், தாங்களும் சுகமாய் வாழ்ந்து நகரின் பொதுச் செலவுகளுக்கும் தாராள மாய் வரி கொடுத்து வந்தார்கள். தெருக்கூட்டுதல், விளக்குப்போடுதல், பள்ளிக்கூடம், கோயில்பூசை முதலிய காரியங்கள் பொதுச் செலவில் நன்கு நடைபெற்று வந்தன.

இப்படி யிருக்கையில் ஒருநாள் இந்நகருக்கு ஒரு நாடோடி வந்து சேர்ந்தான். தான் ஜாலவித்தையில் கைதேர்ந்தவன் என்றும், பல அற் புத ஜாலங்கள் செய்து காட்டுவதாயும் சொன்னான். ஆனால் அந்நகரின் மாந்தர்கள் அனைவரும் ஒவ்வொரு தொழிலில் ஈடுபட்டிருந்தபடியால் அவர்கள் இவனைப் பொருட்படுத்தவில்லை. தத்தம் காரியத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் இந்த ஜால வித்தைக்காரன் மாதவபுரத்தின் கடைத்தெரு முச்சந்தியில் நின்று, எதிரே வரிசையாகப் பல புட்டிகளை வைத்துக் கொண்டு, அவைகளை விலை கூவலானான். அவன் சொன்னதாவது:— "ஓ பிரபுக்களே! கனதனவான்களே! முதியோர்களே! இளைஞர்களே! இதோ பாருங்கள். இந்தப் புட்டிகளில் இருப்பது என்ன தெரியுமா? இதுதான் கலியுக அமிர்தம். அதி அற்புத மருந்து. ஜீவரசம் என்பது இதுதான். இதோ இதை ஊற்றிக் காட்டுகிறேன் பாருங்கள். இதன் துளிகள் சூரியன் ஒளியில் எப்படி முத்துப்போல் பிரகாசிக்கின்றன! ஆஹா! இதன் ஒவ்வொரு துளியும் உங்களுக்குப் புத்துயிர் தரவல் லது. இந்தக் கலியுக அமிர்தத்தை வாங்கிக் கொள்ளுங்கள்."

சாயங்காலம் அலுவல்கள் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த நகரவாசிகள் சிலர் இந்த ஜாலக்காரன் கூவுவதைக் கேட்டுச் சற்று

அங்கே நின்றார்கள். பின்னும் நயமான குரலில் அவன் சொல்லியதாவது :—

"என் பேச்சை நீங்கள் நம்பவேண்டாம். குடித்துப்பார்த்து விட்டு அப்புறம் பணம் கொடுங்கள். இதைப் போன்ற சுவையான பானத்தை உங்கள் ஜன்மத்திலும் சாப்பிட்டிருக்க மாட்டீர்கள். சுவைமட்டுமா? ஆகா! இதன் அற்புத மகிமைகளை என்னவென்று சொல்வேன்? நீங்கள் நாள் முழுதும் உழைத்துக் களைத்துப் போயிருக்கிறீர்களல்லவா? இதில் அரைப்புட்டி வாங்கி சாப்பிடுங்கள். உங்கள் களைப்பெல்லாம் இருந்த விடந் தெரியாமல் பறந்துவிடும். நீங்கள் என்ன சுகத்தைக் கண்டீர்கள்? பகலெல்லாம் உழைத்து விட்டுப் பொழுது சாய்ந்ததும் வீடு சென்று பிணம்போல் தூங்குகிறீர்கள். இந்த அமிர்தத்தை மட்டும் அருந்திவிட்டால் இரவெல்லாம் குதூகலமாய்க் கழிக்கலாம். துக்கமும், கவலையும் ஒரு நொடியில் பறக்கும். அழுது கொண்டுவந்தவர்கள் ஆனந்தக் கூத்தாடிக்கொண்டு செல்வார்கள். பசித்தவர்கள் இதில் கொஞ்சம் சாப்பிட்டால் பசி பத்து காதம் ஓடும். கிழவர்கள் இம்மருந்தை அருந்தினால் வாலிபர்கள் ஆவார்கள். பலவீனர்கள் இதைக் குடித்தால் சிங்கம் போன்ற பலம் பெறுவார்கள். நோயாளிகள் நோய் நீங்கப் பெறுவார்கள். மந்த புத்தியுள்ளவர்கள் பிரகஸ்பதியை யொத்த புத்திக்கூர்மை பெறுவார்கள். விலையோ கொள்ளை மலிவு; புட்டி அரையணா தான்! ஆகா! அரையணாவுக்குப் பயந்து இந்தப் பூலோக அமிர்தத்தை வேண்டாமென்று தள்ளுவீர்களா?"

முதலில் இரண்டு மூன்றுநாள் இந்த ஜால வித்தைக்காரன் வலையில் யாரும் விழவில்லை. என்னமோ, ஏதோ என்று பயப்பட்டார்கள். ஆனாலும் அவன் சோர்ந்துவிடவில்லை. தினந்தோறும் அதே முச்சந்தியில் விலை கூவிக் கொண்டிருந்தான். கடைசியில் இதைப் பரீட்சித்துத் தான் பார்க்கலாமே என்று சிலர் துணிந்திறங்கினார்கள். அவர்களைப் பார்த்து இன்னும் சிலர் அம்மருந்தை வாங்கிக் குடித்தார்கள். குடித்தவர்களெல்லாம் அதன் மகிமையைப் பற்றிப் பிரசாரம் செய்யலானார்கள். இவ்வாறு அந்த ஜாலக்காரனின் மருந்து வியாபாரம் விரைவாக வளர்ந்து வந்தது. இரண்டு மூன்று வருஷத்திற்குள் அந்நகர ஜனங்களில் முக்கால் வாசிப் பேர் அவனுடைய வாடிக்கைக் காரர்களாயினர். ஒவ்வொரு வீதியிலும் அவனுடைய கிளைக் கடைகள் ஏற்பட்டன.

வியாபாரம் வளர்ந்ததைப்போல் மருந்தின் விலையும் அதிகமாகிவந்தது. ஆரம்பத்தில் அரையணாவாயிருந்த புட்டி ஓரணா, இரண்டணாவாகி, இப்போது நாலணாவுக்கு வந்துவிட்டது. ஆயினும் ஜனங்கள் அதை வாங்கிக் குடித்தே வந்தார்கள்.

2

மாதவபுரத்தில் அறிவாளிகள் சிலர் இருந்தனர். தங்கள் நகரத்திற்கு வந்தவிபத்தை எண்ணி அவர்கள் பெரிதும் கவலை கொண்டார்கள். ஜனங்களுக்கு அவர்கள் போதனை செய்ததாவது :—“ ஐயோ ! மக்களே ! கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். கஷ்டப்பட்டுத் தேடிய பொருளை இப்படி யாரேனும் அநியாயமாய்த் தொலைப்பார்களா ? வேண்டாம் ; அவன் பெரிய மந்திரவாதி ; சூனியக்காரன். அவன் அருகிலும் போக வேண்டாம். அவன் விற்பது அமிர்தமன்று ; ஏதோ வசிய மருந்து. உங்களையெல்லாம் மயக்கிப் பணத்தைப் பிடுங்கிக்கொண்டு படுகுழியில் தள்ளுகிறான். அவனருகிலும் போகாதீர்கள் ” என்றார்கள்.

அவர்கள் என்ன சொல்லியும் ஒருமுறை ஜாலக்காரன் வலையில் வீழ்ந்தவர்கள் கேட்கவில்லை. “பணம் போனால் என்ன ? வேறு எது போனால் என்ன ? அந்த மருந்தின் ஆனந்தமே ஆனந்தம். அது கவலை தீர்க்கிறது ; களைப்பைப் போக்குகிறது ; பசி தெரியாமல் செய்கிறது ; உற்சாகமளிக்கிறது ; வேறென்ன வேண்டும் ?” என்றார்கள்.

ஆனால் ஏற்கனவே அவன் வலையில் விழாத ஜனங்கள் மேற்சொன்ன அறிவாளிகளின் போதனையினால் கண்விழித்தார்கள். அந்த சூனியக்காரனின் மாயங்களை அவர்கள் நன்கறிந்து கொண்டார்கள். நாளுக்கு நாள் அவன் பணக்காரனாகி வருவதையும், அவன் வலையில் விழுந்த தங்கள் உற்றார் உறவினர் எல்லாம் வரவர ஏழ்மையடைந்து வருவதையும் அவர்கள் கவனித்தார்கள். ஆகவே அவர்கள் கூட்டமாய் அரசனிடம் சென்று எல்லா விஷயங்களையும் எடுத்துச் சொல்லி அந்த ஜாலக்காரனை நகரைவிட்டு ஓட்டிவிட வேண்டுமென்று முறையிட்டார்கள்.

ஜனங்களுடைய பணமெல்லாம் ஜாலக்காரனிடம் போய்க்கொண்டிருந்ததின் பயனாக, அரசனுக்கும் வருமானம் மிகவும் குறைந்து போயிருந்தது. ஆகவே அவன் உடனே ஜாலக்காரனை அழைப்பித்து “மூன்றுநாளில் நீ நகரைவிட்டுப் போய்விடவேண்டும்” என்று உத்திர விட்டான். அப்பொழுது ஜாலக்காரன் சொல்கிறான்:—“ அரசே ! யாரோ ஒரு சில துர்ப்புத்திகள், விஷமிகள் சொல்லுவதைக் கேட்டு என்னை நகரை விட்டுப்போ என்று சொல்கிறீர்கள். இதன் பலன் என்னவாகும் தெரியுமா ? உங்கள் ஆட்சிக்கே அபாயம் நேரும். ஊர் ஜனங்களில் முக்கால் வாசிப்பேர் என் கட்சியில் இருக்கிறார்கள். அவ்வளவு பேருக்கும் நான் அளவிலாத சந்தோஷத்தைத் தினந்தோறும் அளித்துவருகிறேன். என்னைத் துரத்திய செய்தி அறிந்தால் உடனே அவர்கள் கலகமாய்க் கிளம்பிவிடுவார்கள். எல்லாவற்றையும் நன்கு யோசித்து முடிவு செய்யுங்கள். இது ஒருபுறமிருக்கட்டும். என்னால்

உங்களுடைய வருமானம் சுமார் எவ்வளவு குறைந்து போயிருக்கலாம்? சொல்லுங்கள்" என்றான்.

அரசன் பொக்கிஷ மந்திரியைக் கேட்டான். "ஒரு லட்சம் குறைந்திருக்கலாம்" என்றான் மந்திரி. ஜாலக்காரன் சொல்கிறான்:— "அரசே, அந்த ஒரு லட்சம் ரூபாயும் நானே ஈடுசெய்து தருகிறேன். கவலைவேண்டாம். அத்துடன் அரண்மனைச் செலவுக்காகத் தனியாய் ஒரு லட்சம் தருகிறேன். வைத்தியசாலைகள் கட்டுவதற்கு மற்றொரு லட்சம் கொடுக்கிறேன். தற்போது நமது நகரத்தில் பள்ளிக்கூடங்களுக்கு நல்ல கட்டிடம் இல்லை. பெரிய கட்டிடம் ஒன்று கட்டுவதற்கு முக்கால் லட்சம் தருகிறேன். உங்கள் உத்தியோகஸ்தர்களெல்லாம் சம்பளம் போதவில்லையென்று குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் உயர்த்திக் கொடுங்கள். இதற்காக இரண்டு லட்சம் ரூபாய் கொடுக்கத் தயார்."

இவ்வாறு ஜாலக்காரன் சொன்னதைக் கேட்டதும் எல்லாருக்கும் மிகவும் சந்தோஷமாயிற்று. இவ்வளவு நல்ல பிரஜையை நாட்டைவிட்டுத் துரத்த எண்ணினோமே யென்று அரசன் வெட்கமடைந்தான். ஊர் ஜனங்களுக்கு இது தெரிந்தபோது முன்னைவிட அதிகமாக ஜாலக்காரனிடம் அபிமானம் கொண்டார்கள்.

3

ஜாலக்காரன் தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றினான். சொன்னது சொன்னபடி எல்லாக் காரியங்களுக்கும் பணங் கொடுத்தான். ஆனால் தன் மருந்தின் விலையைப் புட்டிக்கு ஓரணுவீதம் உயர்த்திவிட்டான். இதில் கிடைத்த வருமானத்துக்கும் பொதுக்காரியங்களுக்கு அவன் கொடுத்த பணத்துக்கும் சரியாய்ப் போயிற்று. அவனுடைய லாபத்தில் ஒரு தம்பிடிகூடக் குறையவில்லை.

இராஜ சபையில் ஜாலக்காரனுக்கு முதன்மை ஸ்தானம் கிடைத்தது. அரசனுக்கு அடுத்தபடியில் அவனுக்கே எல்லா மரியாதைகளும் செய்தார்கள். ராவ்பகதூர், திவான்பகதூர் முதலிய கௌரவப்பட்டங்கள் ஒன்று தவறாமல் அவனுக்கு அளிக்கப்பட்டன. அவனுடைய கடை ஒவ்வொன்றுக்கும் போலீஸ்காரர் காவல் புரியலாயினர். நகரில் ஜாலக்காரனுக்கு விரோதமாய் யாரும் பேசக் கூடாதென்று உத்திரவு பிறந்தது. இராஜதுவேஷத்துக்கு அடுத்தபடியில் இதுவே பெரிய குற்றமாயிற்று.

மாதவபுரத்தின் அறிவாளிகள் மட்டும் முன்னைவிட அதிக கவலை கொண்டார்கள். "ஐயோ! இதென்ன கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே! இந்த மாயாவியின் வலையில் அரசனும் சிக்கிவிட்டானே? நகரம் நாசமாகின்றதே! ஜனங்கள் அழிந்து வருகிறார்களே!" என்று புலம்பினார்கள். ஆனால் அவர்கள் பேச்சுக்கு யாரும் செவி சாய்க்கவில்லை.

இவ்வாறு ஏழெட்டு வருஷகாலம் கழிந்தது. செல்வம் செழித்திருந்த அந்நகரில் இப்போது தரித்திரம் தாண்டவமாடிற்று. நோய்கள் மலிந்தன. வைத்தியசாலைகளில் இடமில்லாமற் போயிற்று. எல்லாரும் உழைத்துப் பாடுபட்டுக் கௌரவமாய் வாழ்ந்த காலம் போய் இப்போது வீதியெல்லாம் பிச்சைக்காரர்கள் ஆனார்கள். அவர்களுக்குப் பிச்சை போடுவோர் மிக அரியராயினர். திருட்டு, கொலை, அடிதடி முதலிய குற்றங்கள் ஏராளமாய்ப் பெருகின. ஒரு சிறைச்சாலை யிருந்த நகரத்தில் இப்போது எண்பது சிறைக்கூடங்கள் ஏற்பட்டன. மூலைக்கு மூலை பைத்தியக்காரர்கள் காணப்பட்டனர். பசியினாலும், நோயினாலும் குழந்தைகள் மெலிந்து வாடின. தாய்மார்கள் கண்ணீர் வடித்தார்கள். எங்கெங்கும் அழுகுரல் கேட்டது.

ஆனால் ஜாலக்காரனுக்கு மட்டும் ஒரு குறைவும் ஏற்படவில்லை. அவனுடைய செல்வம் நாளுக்கு நாள் பெருகிவந்தது. வருஷத்துக்கு ஒரு புதிய மாளிகை அவன் கட்டிவந்தான். ஆடம்பரமாய் வாழ்ந்தான். ஏராளமான பணம் தன் சொந்த ஊருக்கு அனுப்பினான். அரசனையும், மற்றும் மந்திரிமார், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், பெரிய மனிதர்கள் முதலியவர்களையும் தன் கையில் போட்டுக் கொண்டான். வருஷத்துக்கு ஒரு 'சுற்று' அவன் உடம்பும் பெருத்து வந்தது.

4

மாதவபுரத்தின் அறிவாளிகளுக்குள்ளே ஒரு மகாபுருஷர் இருந்தார். தமது நகருக்கு நேர்ந்த பெருந்துன்பத்தை அவர் பார்த்தார். இனிக் கொஞ்சநாள் சும்மாயிருந்தால் நகரம் அடியோடு அழிந்து விடுமென்பதை உணர்ந்தார். உடனே ஒரு பெரிய மகாசபை கூட்டினார். ஜாலக்காரனுடைய வலையில் வீழ்ந்தவர்கள், வீழாதவர்கள் எல்லாரும் அங்கே வந்து கூடினார்கள். அந்த மகான் அரசனுடைய கோபத்துக்கும் அஞ்சாமல் ஜாலக்காரனுடைய மாயங்களை அவர்களுக்கு நன்கெடுத்துக் கூறினார்.

பத்து வருஷத்துக்கு முன்னால் மாதவபுரம் எவ்வளவு செல்வங் கொழித்து விளங்கிற்று என்பதையும், ஜனங்கள் எவ்வளவு சுகமாய் வாழ்ந்தார்கள் என்பதையும் அவர் முதலில் நினைவூட்டினார். பிறகு அவர்களுடைய தற்போதைய பரிதாப நிலைமையை எடுத்துக்காட்டினார். "இவ்வளவுக்கும் காரணம் யார்? ஜாலக்காரன் தான். அவன் இந்நகரில் அடிவைத்த நாள்முதல் நமக்குச் சனியன் பிடித்தது. அவனுடைய மாய்மந்திரத்தில் கட்டுண்டபடியால் நமக்கு உண்மைவிளங்கவில்லை. இப்போது சற்றே யோசித்துப் பாருங்கள். வீட்டில் உங்கள் பெண்டு பிள்ளைகள் பட்டினி கிடக்கிறார்கள். நீங்கள் பொழுது சாய்ந்ததும் அவனுடைய மருந்துக்கடைக்கு ஓடுகிறீர்கள். மாயமில்லாவிட்டால் இப்படிச் செய்வீர்களா?

"அவன் அரண்மனைச் செலவுக்குப் பணங் கொடுக்கிறான், பள்ளிக்கூடத்துக்குக் கொடுக்கிறான், வைத்திய சாலைக்குக் கொடுக்கிறான் என்று உங்களில் சிலர் நினைக்கிறீர்கள். ஆனால் இந்தப் பணமெல்லாம் அவன் எங்கிருந்து கொடுக்கிறான்? சொந்த ஊரிலிருந்து கொண்டு வந்தானா? அவன் வரும்போது ஒரு காசுமில்லாமல் வந்தவனல்லவா? எல்லாம் உங்களுடைய பணம். உங்களை மயக்கி உங்கள் பணத்தைப் பறித்து அதில் ஒரு சிறு பகுதியைப் பொதுச் செலவுக்குக் கொடுக்கிறான். அதை நாமே நேரில் கொடுத்துவிடக் கூடாதா? இவன் வருவதற்கு முன்னால் நம்மூரில் பொதுச் செலவுகள் நடக்கவில்லையா?

"இவன் கொடுக்கும் பணத்தை மட்டும் கவனிக்கிறீர்கள். இவனால் நேரும் அதிக செலவை கவனித்தீர்களா? ஒரு சிறைச்சாலை இருந்தவிடத்தில் ஒன்பது சிறைச்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றனவே? பைத்தியக்காரர் விடுதி ஒன்று புதிதாய்க் கட்டியிருக்கிறதே? இன்னும், வருமான நஷ்டத்தைப் பாருங்கள். இவன் மருந்தைத் தின்று மக்கள் பலவீனர்களாயும், சோம்பேறிகளாயு மானார்கள். அதனால் தொழில்கள் அழிந்தன. பத்து ரூபாய் வந்தவிடத்தில் இப்போது மூன்று ரூபாய்தான் வருகிறது.

"இவன் வந்தது முதல் நகரில் நோய்கள் பெருகின. குற்றங்கள் வளர்ந்தன. நமது சன்மார்க்கமும் போயிற்று. மக்களே! இன்னும் கொஞ்சநாள் இப்படியே விட்டிருந்தால் நாம் அதோகதியடைவோம். இந்தப் பாதகனை இந்த க்ஷணமே நகரத்தை விட்டு ஓட்டவேண்டும். இல்லாவிடில் பிழைக்க மாட்டோம்."

இவ்வாறு அப்பெரியவர் கூறிய மொழிகளைக் கேட்டதும் ஜனங்கள் கண்திறந்தார்கள். தங்கள் துன்பங்களுக் கெல்லாம் காரணம் அந்த ஜாலக்காரனே என்று உணர்ந்தார்கள். உடனே அத்தனை பேரும் ஒரு முகமாய்க் கிளம்பிச் சென்று ஜாலக்காரன் வீடுசேர்ந்து அவனை விரட்டத் தொடங்கினார்கள். அவன் கொல்லைப்புறமாய் ஓடி அரண்மனைக்குச் சென்று அரசனிடம் தஞ்சம் புகுந்தான். அவனுக்கு இடங்கொடுத்தால் தனக்கும் ஆபத்து வருமென்றறிந்த அரசன் "என்னால் முடியாது. இங்கே நில்லாதே. ஓடிப் பிழை" என்று சொல்லிவிட்டான். வேறு கதியில்லாதவனான ஜாலக்காரன் நகரைவிட்டு ஓடலானான். அது வரை அவன் கடைகளைக் காவல் புரிந்துகொண்டிருந்த போலீஸார் உள்பட ஜனங்கள் அனைவரும் சேர்ந்து அவனைத் துரத்தினார்கள். மாதவபுரத்துக்கு வெளியே வெகு தூரம்வரை அவனை விரட்டியடித்து விட்டுத் திரும்பினார்கள்.

மறுபடி முன்போல் மாதவபுரத்தில் சுபிட்சம் குடிகொண்டது. ஜனங்கள் தங்களுக்கு உண்மை உணர்த்திய மகானை வாழ்த்திக்கொண்டு சுகமாய் வாழ்ந்தார்கள்.

அந்த ஜாலக்காரன் பெயர் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அவன் பெயர்தான் மதுசாரம் என்பது. தற்போது அவன் நமது பாரத நாட்டில் தன் மாய மருந்துகளை விற்று வருகிறான். அவனை இங்கிருந்து துரத்தி யடிப்பதற்கு மாதவபுர வாசிகளைப்போல் நீங்களும் முன்வரப் போகிறீர்களா?

சுயநலம்

கள்ளுக்கடை மூடுவதா? கூடவே கூடாது. எழு கள்ளுக் கடை குத்தகை எடுத்திருக்கிறேன். வருஷத்தில் பத்தாயிரம் ரூபாய் கிடைக்கிறது. சர்க்காருக்கு இதைப்போல் மூன்று பங்கு கந்தாயம் கட்டுகிறேன். கள்ளுக்கடை ஏன் மூடவேண்டும்?

* * * *



நான் எப்படி இங்கு வந்து சேர்ந்தேன் என்று கேட்கிறீர்கள்? கள்ளுக் கடை வழியாகத் தான். சிறைச் சாலையில் கொண்டுவந்து சேர்ப்பதற்குக் கள்ளுக் கடையைப் போல் குறுக்கு வழி வேறு கிடையாது.

* * *

மாதம் 24 ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருந்தேன். ஒரு மாதத்துக்கு முன் வேலை போய்விட்டது. சோற்றுக்கு வழியில்லை. இந்த உபகாரம் செய்தது கள்ளுதான். கள்ளுக்கடை வாழவேண்டும்.

முன்னோர் அரும்பாடுபட்டு வளர்த்த தென்னைமரங்கள் நாசமாய்ப் போகின்றன. ஆனால் கைமேல்வரும் ரொக்கப் பணத்தை வேண்டாமென்று சொல்ல முடியுமா? நில வரி கட்டுவதற்கு எவ்வளவோ சௌகரியமாயிருக்கிறது. பாவம், பழியென்று பார்த்தால் இந்தக் காலத்தில் முடியாது.

*   *   *

என்னைப் பைத்தியக் காரன் என்று சொல்கிறார்கள் முட்டாள் ஜனங்கள். பைத்தியத்தின் ஆனந்தம் அவர்களுக்கு என்ன தெரியும்? அந்த ஆனந்தத்தை அநுபவிக்க வேண்டுமானால் முதலில் கள்ளுக் குடித்துப் பயிலுங்கள். அதன் மூலம் கொஞ்சம் கொஞ்சமாகப் புத்தியைக் கடந்து நின்று பழகிவந்தால், கடைசியில் என்னைப் போன்று நிரந்தர ஆனந்த நிலைக்கு வந்து சேரலாம்.

*   *   *

பிரிட்டிஷ் சர்க்காரின் பெருமையே பெருமை! அந்த சர்க்காரைத்தாங்கி நிற்கும் இந்தக் கள்ளுப் பீப்பாயின் மகிமையே மகிமை! சென்னை சர்க்காரின் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு நாங்கள் கொடுக்கிறோம். இதில் பெரும் பகுதியை ஏழை எளியவர்கள், அன்றையக் கஞ்சிக்கில்லாதவர்களிடமிருந்து வசூல்செய்கிறோம்! வேறு எந்த இலாகாவேனும் இவ்வளவு அரிய ஊழியம் செய்கிறதா? கள்ளுக் கடை மூடினால் இவ்வளவு பணமும் அல்லவா நஷ்டமாகும்? அத்துடன் எங்களுடைய உத்தியோகமும் போய்விடும். கூடவேகூடாது.

என் புருஷன் இன்னும் கள்ளுக் கடையிலிருந்து வரவில்லை. குழந்தைகள் பசி தாங்காமல் அழுகின்றன. ஏதாவது மீத்துக் கொண்டு வருவானோ, வெறுங் கையுடன் வருவானோ தெரியாது. கள்ளுக் கடைகளில் இடி விழாதா?

*   *   *   *

கள்ளுக் கடை மூடி விட்டால் எனக்குப் பாதி வேலை மீதியாகும். ஆனால் ஒருவேளை உத்தியோகமே போய்விட்டால்? ஆமாம்! போதிய வேலையில்லையென்று பாதிப் பேரைத் தள்ளிவிடுவார்கள். கூடாது, கூடாது, கள்ளுக் கடை மூடக் கூடாது.

*   *   *   *

நான் சாக்கடையில் விழுந்து கிடக்கிறேனென்று, என்னைப் பார்த்துச் சிரிக்கிறீர்களா? நல்லது; உங்கள் பிள்ளைகள் அல்லது பேரர்களுக்கு இந்த கதி நேரிடாதென்று யார் கண்டது? கடவுள் புண்ணியத்தில் கடைகளைமட்டும் மூடாதிருக்க வேண்டும்!





இந்தியாவில் பிரிட்டிஷ் கொடி பறக்கும் வரையில் குடிக்கும் சுதந்திரத்துக்குப் பாதகம் நேராது. தனி மனிதர்களின் சுதந்திரந் தான் ஆங்கில ஆட்சியின் அடிப்படையான கொள்கை. பொது ஜனங்களின் சுதந்திரத்தைப் பற்றிக் கேள்வியில்லை.

குடியிருக்கும் வீட்டில் நெருப்பு வைக்கும் பாதகனை என்ன செய்கிறார்கள்? எப்படியேனும் தேடிப்பிடித்து விசாரணைசெய்து தண்டிக்கிறார்கள். மதுசாரமென்னும் அரக்கன் மனிதன் வாழும் தேகமாகிய வீட்டில் நெருப்பு வைக்கிறான். குடித்தவனுடைய இரத்தம் தீப்பற்றி எரிகிறது. தீ மிதமிஞ்சிப் போகும்போது வீடே சாம்பராகிறது. அதாவது குடிகாரன் உயிர் துறக்கிறான். இத்தகைய மதுசார மென்னும் பாதகனுக்கு லைஸென்ஸா கொடுத்து மனிதர்களின் தேகத்துக்குத் தீ வைக்கும்படி விட்டிருக்கலாமா?

* * * *

சுமார் 100 வருஷங்களுக்கு முன்பு வரையில் ஐரோப்பியர் ஆப்பிரிக்கா தேசத்தின் சுதேசிகளாகிய நீகிரோக்களைப் பிடித்துக்கொண்டு போய் அமெரிக்காவில் அடிமைகளாக விற்று வந்தார்கள். பெரிய கிளர்ச்சிக்குப் பிறகு இந்தக் கொடிய வியாபாரம் ஒழிந்தது. ஆனால் ஸர் சார்லஸ் பர்ட்டன் என்பவர் சொல்வதைக் கேளுங்கள்:—"ஆப்பிரிக்காவிலிருந்து வெள்ளைக்காரன் தன் துப்பாக்கியையும் சாராயப்புட்டியை எடுத்துக்கொண்டு போய் விடுவாயிருந்தால், பயங்கரம் வாய்ந்த அடிமை வியாபாரம் திரும்ப வந்தால்கூட பாதகமில்லை. இந்த மாறுதலினால் ஆப்பிரிக்காவுக்கு மொத்தத்தில் நன்மையே உண்டாகும்." ஆர்ச்பிஷப் பாரர் என்பவரும் இதே மாதிரி சொல்கிறார்:—"அடிமை வியாபாரத்துக்குப் பின்வந்த மதுவியாபாரம் முன்னதைவிட மகா கொடியதாயும், அழிவு விளைப்பதாயும் இருக்கிறது. நமது தந்தைமார் எவ்வளவோ பெரு முயற்சி செய்து ஆப்பிரிக்காவிலிருந்து அடிமை வியாபாரிகளின் சவுக்கடி ஆட்சியை யொழித்தார்கள். இப்பொழுது நாம் மதுவியாபாரிகளின் தேள்கடி ஆட்சியை அங்கே புகுத்தியிருக்கிறோம்."

மதுசாரம்.

சில குறிப்புகள்

மதுசாரம் தண்ணீரைப் போன்ற ஒரு திரவப் பொருள். அதற்கு ஒருவித நாற்ற முண்டு. திரவப் பொருளானாலும் அது தாகத்தைத் தணிக்காது. தண்ணீரின் குணத்துக்கு நேர்மாறான எரிக்கும் குணம் அதற்குண்டு. ஆகையால் தான் சாராயம், பிராந்தி, வுஸ்கி இவைகளில் வெகுசீக்கிரம் நெருப்புப்பற்றிக் கொள்கிறது. சுத்த மது சாரத்தை அதாவது தண்ணீர் கலவாத தனி மது சாரத்தைக் குடிக்க முடியாது. குடித்தால் அது தொண்டையை உடனே சுட்டுப் புண்ணாக்கிவிடும்.

* * * *

கள்ளு, பீர் இவைகளில் மது சாரம் குறைவு. ஒயினில் அதை விட அதிகம். சாராயம், ஜின், ரம், பிராந்தி, வுஸ்கி இவைகளிலுள்ள மது சார அளவு மற்றவைகளிலுள்ளதை விட அதிகம். பீரில் 100 க்கு 4 பங்கு முதல் 7 பங்குவரையில் மது சாரம் இருக்கும். கள்ளில் 100 க்கு 8 பங்கு முதல் 12 பங்குவரையில் இருக்கும். ஒயினிலும் அநேக டானிக் "மருந்து" களிலும் 100 க்கு 15 முதல் 25 பங்குவரையில் மதுசாரம் கலந்திருக்கும். சாராயத்தில் 100 க்கு 40 பங்கு மது சாரம். ஜின், ரம், பிராந்தி, வுஸ்கி இவைகளில் 100 க்கு 50 வரை மதுசாரம் உண்டு.

* * * *

எல்லா மது பானங்களிலுமுள்ள விசேஷ குணம் போதை. இதற்குக் காரணம் அப்பானங்களிலுள்ள மது சாரந்தான். மனிதனுடைய உணர்ச்சி, புத்தி, ஞாபகம், விவேகம், தேகத்தின் அங்கங்களை நடத்தும் சக்தி இவைகளுக்கெல்லாம் மூலஸ்தானம் மூளையாகும். இந்த மூளையானது தன் இயற்கையமைப்பை இழந்து, தான் செய்யவேண்டிய வேலையை சரிவரச் செய்யும் சக்தியற்றுத் தடுமாறுவதற்குப் பெயர்தான் போதை. ஒருவன் எவ்வளவு புத்தி குறைவான மனிதனானாலும், சாதாரணமாய் அவனுடைய மூளை சுபாவக்கிரமம் தவறாமல் வேலைசெய்யும். ஆனால் ஒருவன் எவ்வளவு புத்திசாலி யானாலும் அவனுக்குப் போதை யுண்டாகிவிட்டால் கீழ்மேல் தெரியாமல் தடுமாறுவான். சாதாரண இயந்திரக்கல்லானாலும் அச்சு சரியாய் நின்றால் அது தன் வேலையைச் செய்யும். ஆனால் எவ்வளவு உயர்ந்த இயந்திர

மாயிருந்தபோதிலும், சக்கரங்கள் கெட்டிருந்தால், வேலைசெய்யாதல்லவா ?

* * * *

மதுசாரம் ஒரு வித விஷம். அந்த விஷம் இரத்தத்துடன் கலந்து மூளைக்குச் செல்கிறது. அங்கே நுட்பமான நரம்பு ஸ்தானங்களையும், தேகத்தையெல்லாம் நடத்தும் மின்சார ஜீவ சக்தியையும், விவேகமென்னும் தெய்வீக சக்திக்கு இருப்பிடமான கேந்திரத்தையும் அது கெடுத்து விடுகிறது. இதனால்தான் மதுபானம் செய்த மனிதனுடைய எண்ணமும், பேச்சும், செயலும், மதுசார விஷம் ஏறிய அளவுக்கு, இயற்கை வழி தவறிச் செல்கின்றன. ஆனால் மனிதனிடம் இயற்கையாக வுள்ள ஜீவசக்தி முழுதும் உடனே தோல்வியடைவ தில்லை. இந்த ஜீவசக்தியானது மதுசார விஷத்துடன் போர் செய்து வென்று மனிதனுடைய மூளையை இயற்கை நிலைக்குக் கொண்டுவரும். இதனால் தான் போதை தெளிகிறது. ஆனால் இப்படி எவ்வளவு காலந்தான் அக்கொடிய விஷத்தை எதிர்த்து நின்று போர் செய்ய முடியும்? நாளடைவில் இயற்கை சக்திக்கும் பலம் குறைந்து போகும். அதன் பின்னர் உள்ளே செல்லும் மதுசார விஷம் தீராத நோய்களை உண்டாக்கும்.

* * * *

உலகத்திலுள்ள எல்லாத் தித்திப்புப் பண்டங்களிலிருந்தும் மதுபானம் உண்டாக்கலாம். திராக்ஷாரஸம், கருப்பஞ்சாறு, பனந் தெளிவு, தென்னந்தெளிவு, வெல்லம் கலந்த நீர் முதலிய எதையும் கள்ளாகச் செய்யலாம். நெல், சோளம் முதலிய தானியங்களையும் முளைகட்டி ஒருவித மது பானம் செய்யலாம். இவையெல்லாம் நல்ல உணவுப் பொருளை விஷமாக்குவதேயாகும். வீட்டைப் பிரித்து அடுப்புக்கு விறகு சேகரிப்பது போல்.

* * * *

மது சாரத்திற்குத் தண்ணீருடன் அதிவிரைவாகக் கலந்து கொள்ளும் இயல்பு உண்டு. ஆகையால் தேகத்திலுள்ள ஈரத்தை அது இழுத்துக் கொள்ளும். இவ்வாறே சோறு முதலிய உணவுப் பொருள்களுடன் சேர்ந்தால் அவற்றிலுள்ள ஈரத்தை இழுத்துக் கொண்டு உலர்த்தி விடும். உடம்பிலுள்ள ஈரத்தை மது சாரம் எடுத்துக்கொண்டு விடுவதினால்தான் மதுபானம் செய்தவனுக்கு அதிக தாகம் உண்டாகிறது.

* * * *

கள்ளு, சாராயம், பிராந்தி, உஸ்கி முதலிய பானங்களெல்லாம் நரம்புத் தளர்ச்சி உண்டாக்கும். இவைகளால் தேகத்திற்

குச் சக்தியுண்டாகுமென்று சாதாரண ஜனங்கள் நம்புவது முற்றிலும் தவறு. குடித்தவுடனே உண்டாகும் உற்சாகம் ஒரு மோசடி. அது சக்தியின் அடையாள மல்ல. மனதில் தோன்றும் எண்ணங்களையும், பேச்சையும், செயலையும் அடக்கியாண்டு வேண்டிய துறைகளில் செலுத்துவது மதி. இந்த மதியை முதலில் மதுசார விஷம் தாக்குகிறது. எஜமானன் வீட்டில் இல்லாமற் போனால் வேலைக்காரர்கள் கூத்தாடி விளையாடி வேண்டியதைச் செய்வார்கள். உபாத்தியாயர் தூங்கினால் குழந்தைகள் கொண்டாட்டமாகத் தடையின்றி விளையாடுவார்கள். இம்மாதிரி தான் மதுசார விஷம் மூளைக்கேறி மதி தன் வேலையைச் செய்ய முடியாமல் தடுமாறிப் போனதும், மதியின் வேலைக்காரர்களான நரம்புகள் ஒழுங்கும் கட்டுப்பாடும் இன்றி இஷ்டப்படி கூத்தாடும். இதைத்தான் உற்சாகம் என்று நாம் தவறாக எண்ணுகிறோம். நாளாக ஆக, விஷம் அதிகமாக ஏறி எல்லா நரம்புகளும் தளர்ச்சியடைந்து விடுகின்றன.

*　　*　　*　　*

தேகத்தில் இருவித உஷ்ணம் உண்டு. ஒன்று உள்சூடு, மற்றொன்று வெளிச் சூடு. உள் சூட்டின் வேகம் ஒரே விதமாயிருக்கும். அது ஆரோக்கியத்திற்கு வேண்டிய ஒரே நிலையில் எப்போதும் நிற்கவேண்டும். தேகத்தின் வெளிச்சூடு கொஞ்சம் ஏற்றத்தாழ்வு அடையும். நமது உடம்பில் சூடு உண்டாக்கும் அக்கினியிருக்கிறது. அதற்கு இரையாகத்தான் நாம் உணவு உட்கொள்கிறோம். அந்த அக்கினியை அடக்கி ஆளும் எஜமானன் மூளை. வீட்டில் அடுப்பைப் பார்த்துக்கொள்ளும் இல்லாளைப்போல், தேகத்தின் அடுப்பைக் காத்து, நெருப்பு அணையாமலும் அதிகமாய் எரியாமலும் பார்த்து வருவது மூளையிலுள்ள கேந்திரஸ்தானம். இதிலிருந்து பல்லாயிரம் நரம்புகள் கிளம்பி தேக முழுவதும் பரவியிருக்கின்றன. அவைதான் தேகத்திலுள்ள சூட்டைப் பத்திரமாய்ப் பாதுகாத்து வருகின்றன.

*　　*　　*　　*

மேற் சொன்ன அடுப்பைக் காக்கும் இல்லாளை மது சாரம் துன்பப்படுத்துகிறது. மது உள்ளே சென்றதும் தேகத்தின் சூடு அதிக மாவதுபோல் தோன்றுவது இதனால் தான். அதாவது அடுப்பு மிதமிஞ்சி எரிந்து சூடு வெளியே வருகிறது. அப்போது குளிர் போயிற்றென்றும், சூடு அதிகமாயிற்றென்றும் தோன்றும். ஆனால் இத்தோற்றம் உண்மையன்று. உண்மையென்ன வென்றால் உள் சூடு குறைநது வெளிச்சூடு அதிகமாயிற்று.

ஒரு பானை நிறையச் சோறு அல்லது கூழ் சமைத்து இறக்கினால் மேல்பாகத்திலிருந்து சூடு ஆறிக்கொண்டே போகும். அடிப்பாகத்தில் சூடு இருக்கும். ஒரு கரண்டியைப் போட்டுக் கிளறிக் கொடுத்தால் அடிச் சூடு மேலே வரும். இதனால் சூடு புதிதாய் உண்டாயிற்றென்று நினைக்கலாமா? அதற்குமாறாக, கிளறிக்கொடுத்துக் கொண்டேயிருந்தால் சீக்கிரத்தில் பானைச் சோறு முழுதுமே ஆறிப்போகும். மது பானத்தினால் தேகத்திலுண்டாகும் சூடு இதைப் போன்றதுதான். மது பானத்தினால் உண்டாகும் உற்சாகத்தைப் போலவே இதுவும் ஒரு மோசடி. ஆகையால் குளிரைப் போக்கவென்று மது பானம் உட்கொண்டால் தேகத்தின் உட் சூடு குறைந்துபோய்த் தீராத நோய்கள் உண்டாகும்.

*   *   *   *

மதுசாரத்திற்கும் நல்ல உபயோகம் உண்டு. அநேக இயந்திரங்களில் இதை உபயோகித்துப் பலவேலைகள் செய்விக்கலாம். இரஸாயனத் தொழில்களில் அது மிகவும் பயன்படும். ஆனால் அதை மனிதனுடைய தேகத்திற்குள் செலுத்தி மூளையையும் ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொள்ளுதல் பெரும் அறிவீனமாகும்.

திருநெல்வேலி ஜில்லா தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் மூன்றாவது மகாநாடு சென்ற மாதத்தில் நடைபெற்றது. 1930-ம் வருஷத்திற்குள் இந்தியாவிலிருந்து தீண்டாமையை அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்றும், அதற்காக அரசாங்கத்தார் தங்களுடைய சகல அதிகாரங்களையும் பிரயோகிக்க வேண்டுமென்றும் இம்மகா நாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நோக்கம் நிறைவேறும் பொருட்டு அரசாங்கத்தார் உடனே செய்ய வேண்டிய காரியங்களையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவற்றுள் முதன்மையானது வருமாறு:—

"1930 ௵ டிசம்பர்௴ 31உக்குள் இந்தியாவிலுள்ள கள்ளு சாராயக் கடைகள் எல்லாவற்றையும் மூடிவிட வேண்டுமென்றும், அயல் நாட்டு மது இறக்குமதியையும் நிறுத்திவிட வேண்டுமென்றும் இம்மகா நாடு அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது. அதனால் நஷ்டமாகும் வருமானத்துக்கு ஈடுசெய்ய அயல்நாட்டுத் துணி, மோட்டார் வண்டி, பெட்ரோல் எண்ணெய் இவற்றின்மீது 100க்கு 100 வீதம் இறக்குமதி வரி விதிக்க வேண்டியது."

கள்ளை நிறுத்துவதைப்போல தாழ்த்தப் பட்ட வகுப்பாருக்கு உதவி செய்யக் கூடிய திட்டம் வேறொன்று மில்லை. "தாழ்த்தப் பட்டவர்களின் ரக்ஷகர்கள் நாங்கள்" என்று அரசாங்கத்தார் சொல்வது உண்மையானால் இந்தத் தீர்மானத்தை உடனே நிறைவேற்றி வைப்பார்கள்.

நான் ரயிலேறியது

[வி. என். இராகவன்]

பார்ஸல் எக்ஸ்பிரஸ் வண்டியில் எப்பொழுதுமே ஜனக்கூட்டம் மதிகம். ஆகவே வண்டி $10\frac{3}{4}$ மணிக்குத் தான் புறப்படுவதா யிருந்த போதிலும் $9\frac{1}{2}$ மணிக்கு முன்னமேயே நாங்கள் எழும்பூர் ஸ்டேஷனுக்கு வந்துவிட்டோம். வண்டியில் வசதியான இடம் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்து என்னுடன்கூட ஸ்டேஷன் வரையில் வந்த என் தம்பிகளாகிய ராமு, கோபு இருவரையும்கூட வண்டி புறப்படு மளவும் இருந்துவிட்டுப் போகச் சொன்னேன். கூடிய சீக்கிரத்தில் ராமு டிக்கட் வாங்கிக்கொண்டு வந்துவிட்டான். பிளாட் பாரத்திற்குப் போகும் வழியில் நின்று கொண்டிருந்த துரைக்கு ஒரு "குட் ஈவினிங்" கும் இரண்டணுவும் சமர்ப்பித்தவுடன் எங்கள் மூவருக்கு மட்டும் ரயில்வே கேட் வழிவிட்டது. வண்டியைக் காண்பதற்கு $10\frac{1}{4}$ மணி ஆயிற்று.

வண்டி வந்து நின்றவுடன் எனக்கு ஒரு நல்ல இடம் அகப்பட்டது. உடனே காஞ்சிபுரம் கருட சேர்வையோ, சிதம்பரம் ஆருத்ரா தரிசனமோ, திருவண்ணுமலை கார்த்திகை தீபமோ என்று சந்தேகிக்குமாறு ஒரே ஜனக் கூட்டம் வண்டியை நோக்கி ஓடி வந்தது.

"பார்த்தாயா ராமு! நான் அப்பொழுதே சொன்னேனே. இப்பொழுது தான் நாமும் கொஞ்சம் உஷாராயிருக்க வேண்டும். வண்டி புறப்படும் வரையில் நீங்கள் இருவரும் என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருங்கள்" என்று சொன்னேன்.

காலியாக இருந்த எங்கள் வண்டி இரண்டொரு நிமிடத்திற்குள் நிரம்பி வழியெல்லாம் ஆட்கள் நிற்கவேண்டிய தாயிற்று.

ராமு ரயில்வே ஸ்டேஷன் கடியாரத்தைப் பார்த்துவிட்டு, மணி "10-17 ஆகிறது. இன்னும் 13 நிமிஷம் தானிருக்கின்றது. ஜாக்கிரதையாகப் போய் வா. நாங்கள் எழுந்ததும் படுக்கையை விரித்துக்கொள்ளு. ஊர்போய்ச் சேர்ந்ததும் கடிதமெழுது" என்றுன். இப்போது ஒரு வாலிப ஸ்திரீயுடன் வண்டியிலேறிய கொழுத்த மனிதன் ஒருவன் தள்ளாடித் தள்ளாடிக்கொண்டு வந்து இரண்டு ஸ்திரீகள் உட்கார்ந்திருந்த ஒரு பலகையின் அருகில் சென்று உட்காரப் பிரயத்தினம் செய்துகொண்டிருந்தான். அவர்கள் பயத்தினுல் திகைத்துக் கூச்சலிட அவனருகி லிருந்தவர்கள் அவனைத் தடுத்தார்கள். அவனது விகாரமான முகத்தையும், பெரு மூச்சையும், தள்ளாட்டத்தையும் கண்டு மனதிரங்கி, "ஐயா, உங்களுக்கு என்ன உடம்பு?" என்று கேட்டேன். பதில் சொல்வதற்கு அவன் என் பக்கம் திரும்பினுன். விளக்கு வெளிச்சத்தில் அவன் முகத்தைப் பார்த்ததும் எனக்கு பகீர் என்றது.

அவனே வெறிக்கக் குடித் திருக்கிறன், தள்ளாடுகிறன், சுய புத்தியை இழந்துவிட்டிருக்கிறன். இல்லாவிட்டால் இரண்டு அன்னிய ஸ்திரீக ளிடையில் உட்கார முயலுவான? அவன் என்னை உற்று நோக்கி விட்டு, "நானு? டேஞ்சர்" (அபாயம்) — என்றன்.

என்னெதிரி லுட்கார்ந்திருந்த வாத்தியார் ஒருவர் இங்கிலீஷில் என் னுடன் "அவன் வெறிக்கக் குடித்திருக்கிறன். புத்திசாலியா யிருந் தால் அவனுடன் பேசக் கூடாது" என்றர். அவனுடன் வந்த வாலிப ஸ்திரீ அவன் மனைவி யென்று சொல்லிக்கொண்டாள். குடிகாரன் கையில் ஒரு பத்து ரூபாய் நோட்டும் சில்லரைகளும் இரண்டு டிக்கட்டு களு மிருந்தன. அவனுடைய சட்டையினலும் உடையினலும் அவன் பெரிய மனிதனகத்தா னிருக்க வேண்டுமென்று தோன்றியது. கள் என்னும் சனியனுக்குத் தன் சுயபுத்தியை விற்றுவிட்டான். என்ன அவமானம்! அவன் மனைவி துயரத்துடன் தன் முகத்தைக் கையால் மூடிக்கொண்டிருந்தாள். என்னெதிரி லிருந்த ஒருவர், "குடி மயக் கத்தில் பணத்தையும் டிக்கட்டையும் எங்கேயாவது விட்டுவிடப் போகி றர்" என்று சொல்லி அவற்றைப் பிடுங்கி அவன் மனைவியிடம் கொடுத்தார். இது ஒன்றும் குடிகாரனுக்குத் தெரியாது. உட்கார்ந் திருந்த அவன் இப்பொழுது படுத்துப் பிதற்றிக் கொண்டிருந்தான்.

கொஞ்ச நேரத்திற் கெல்லாம் ஒரு விதமான சப்த முண்டாயிற்று. நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். குடிகாரன் வாந்தி பண்ணிக் கொண்டிருந்தான். இப்பொழுது நினைத்தாலும் அவ்விபத்து என் கண் முன் அப்படியே தோன்றுகிறது. உடனே ஒரு துர்நாற்றம்!—புளித்த காடியின் நாற்றம்! "ஐயோ!" என்றேன். சட்டென்று நாங்கள் மூவரும் சொல்ல முடியாக் கஷ்டத்துடன் எங்களுடைய அருமையான இடத்தைக் காலி செய்துவிட்டு வெளியே குதித்து விட்டோம். ராமு என்னிடம், "இந்தக் குடியனை வண்டியைவிட்டு இறக்கிவிட்டு மற்ற காரியம் பார்க் கிறேன்" என்று சபதம் கூறி ஸ்டேஷன் மாஸ்டரிடம் போனன். வண்டி புறப் படுவதற்கு சில நிமிஷந்தா னிருந்தது. நிற்பதற்குக்கூட இடமில்லாமல் மற்றொரு அறையில் தத்தளித்துக்கொண் டிருந்த என்னை ராமு பார்த்து "அப்பா! லக்ஷ ரூபாய் வருவதா யிருந்தாலும் நான் பார்ஸல் எக்ஸ்பிரஸில் போக மாட்டேன்" என்றன்.

நான் "அது கிடக்கட்டும்; ஸ்டேஷன் மாஸ்டர் என்ன சொன் ஞர்?" என்று கேட்டேன். ராமு—"அவன?—'நீ என்ன டாக்டரா? அவன் குடித்திருக்கிறன் என்று நிரூபிப்பாயா?' என்று கேட்கிறன். அதற்கு நான் கோபித்துக்கொண்டு ஸ்டேஷனிலேயே ஒரு டாக்டரும் வைத்திருக்க வேண்டுமென்றேன். அதற்கவன், 'இதெல்லாம் பார்த் தால் முடியாது ஸார்! இந்த வண்டியில் இதெல்லாம் சகஜந்தான்' என் றன். அவனை என்ன செய்வது?"

வண்டியும் புறப்பட ஆரம்பித்தது. ராமு—"அதோ இடமிருக் கிறதே, ஒருவன் தான் படுத் திருக்கிறன்" என்றன். அதற்குள் "அவருக்குப் பெரியம்மை" என்று எங்கிருந்தோ பதில் கிளம்பியது. அது என் காதில் நாராசம்போல் நுழைந்தது.

ஓட்டைப் பானை



ஓட்டைப் பானையில் எவ்வளவு தண்ணீர் ஊற்றினால்தான் என்ன பயன் ? பானை நிறையவேண்டுமானால் முதலில் ஓட்டைகளை அடைக்கவேண்டும். கள்ளுக்கடையை வைத்துக்கொண்டு ஏழைகளின் முன்னேற்றத்துக்காகப் படும் பாடெல்லாம் வீணாகவே முடியும். குடியானவன் கையில் பணந் தங்கவேண்டுமானால் முதலில் கள்ளுக்கடையை மூடவேண்டும்.

———

ஓர் ஆங்கிலேயரின் அருந்தொண்டு

பிரடரிக் நிக்காலஸ் சாரிங்டன் என்னும் ஆங்கிலேயரைப் பற்றி மதுவிலக்கில் சிரத்தை கொண்டவர்கள் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும். இவர் லண்டன் நகரில் 1850-ம் வருஷத்தில் பிறந்தவர். இவருடைய தகப்பனார் பெரிய பீர் வியாபாரி. அந்த வியாபாரத்தில் அவர் ஏராளமான பணம் சம்பாதித்து வந்தார். தமது மகனுடைய கல்விப்பயிற்சி முடிவுற்றதும், தம்முடைய வியாபாரத்தை அவன் ஏற்றுக் கொள்வதற்காகப் பயிலும்படி கட்டளையிட்டார். சாரிங்டன் இளமையிலேயே உயர்ந்த சன்மார்க்க இலட்சியமுடையவராயிருந்தார். அவருக்கு பீர் வியாபாரம் பிடிக்கவில்லை. எனவே, தயக்கத்துடன் அவ்வியாபார நுட்பங்களைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினார். இப்பொழுது நடந்த ஒரு சம்பவம் இவருடைய வாழ்க்கையில் பெரியதொரு மாறுதலை உண்டுபண்ணிற்று.

லண்டன் நகரில் ஏழை எளியவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு சமூக ஊழியம் செய்யும் பொருட்டு இவர் அடிக்கடி போவதுண்டு. 1872-ம் வருஷத்தில் ஒருநாள் மாலை இவர் இவ்வாறு சென்றபோது, "உதய சூரியன்" என்னும் பெயர்கொண்ட ஒரு பீர்க்கடையின் பக்கமாகப்போக நேர்ந்தது. அந்தக் கடையும், அதன் சுற்றுப்புறமும் பார்ப்பதற்கு அருவருப்பளித்து, மிக்க அசங்கியமாயிருந்தன. அந்தக் கடையின் வாசலில் ஒரு குடிகாரன் நின்று கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் ஒரு ஸ்திரீ நின்று அவனை ஏதோ கெஞ்சிக்கொண் டிருந்தாள். அந்த ஸ்திரீயின் கந்தல் ஆடையைப் பிடித்துக்கொண்டு மெலிந்து வாடிய மூன்று குழந்தைகள் நின்றன.

அந்த மாது அக் குடிகாரனின் மனைவியென்றும், தனக்கும் குழந்தைகளுக்கும் சாப்பாட்டுக்குக் கொஞ்சம் பணங் கொடுக்கும்படி அவனைக் கெஞ்சிக்கொண் டிருந்தாளென்றும் சாரிங்டன் அறிந்தார். அவர் கண்முன்னே அந்த மனிதன் ஓங்கி ஒரு உதை உதைத்து அம்மாதைச் சாக்கடையில் தள்ளினான். குழந்தைகள் 'ஓ' வென்று அழுதன.

இந்தக் கொரமான காட்சியைக் கண்டுவிட்டு அவர் மேலே நோக்கினார். தன்னுடைய சொந்தக் கம்பெனியின் பெயர் அங்கே எழுதியிருந்ததைப் பார்த்தார். இதுபோன்ற எத்தனையோ பாதகங்களுக்குத் தானும் பொறுப்பாளியா யிருக்கிறேனென்னும் எண்ணம் அவருக் குண்

டாயிற்று. இந்தக் கொடிய வியாபாரத்தில் தான் இனி சம்பந்தப் படுவ தில்லை யென்று அவர் அந்த நிமிஷத்திலேயே பிரதிக்ஞை செய்து கொண்டார். "அந்தக் குடிகாரனின் மனைவியைச் சாக்கடையில் தள்ளிய அதே உதையானது என்னையும் பீர் வியாபாரத்திலிருந்து வெளி யேற்றியது" என்று அவர் பின்னால் ஒருசமயம் கூறினார்.

வீடு திரும்பியதும் பெற்றோரிடம் அவர் தமது மன உறுதியைத் தெரிவித்தார். அவர்கள் எவ்வளவோ தடுத்தும் கேட்கவில்லை. இவ் வாறு தமது தந்தையின் பீர் வியாபாரத்தைப் புறக்கணித்த போது அவர் தியாகம் செய்த பொருள் எவ்வளவு தெரியுமா? $18\frac{3}{4}$ கோடி ரூபாய்!

தமது தந்தையின் வீட்டில்கூட இனி இருப்பதில்லை யென்று அவர் தீர்மானித்து லண்டனில் ஏழைகள் வசிக்கும் பகுதியில் ஒரு சிறு வீடு அமர்த்தி அங்கே சென்று வசிக்கத் தொடங்கினார். அதுமுதல் ஏழை எளியவர்களுக்கு ஊழியம் செய்வதிலும், சிறப்பாக மதுவிலக்குத் தொண்டிலும் தமது காலத்தைச் செலவிட்டு வந்தார்.

அவருடைய தந்தை முதலில் தம் மகன்மீது மிக்க கோபங் கொண் டிருந்தாலும், நாளடைவில் அவருடைய உயர்ந்த நோக்கத்தின் சிறப்பை உணர்ந்து அவருடைய தொண்டுக்குப் பணஉதவி செய்துவந்தார். மர ணத் தறுவாயில் அவர் தமது மகனைப் பார்த்து "அப்பா! நீ தேர்ந் தெடுத்த மார்க்கமே சிறந்தது; அதற்கு ஒருநாளும் அழிவில்லை" என்று ஆசீர்வதித்து விட்டுக் காலமானார்.

ஒரு புறம் ஏழைகளிடையே ஊழியம் செய்வதிலும், மற்றொரு புறம் மதுவிலக்குச் சட்டத்துக்காகப் போரிடுவதிலும் சாரிங்டன் தமது வாணு ளைக் கழித்துவந்தார். அவர் அடைந்த கஷ்டங்களுக்கு அளவேயில்லை. எத்தனையோ தடவை, அவர் முரடர்களால் அடிக்கப்பட் டிருக்கிறார். அதிகாரிகளின் கோபத்துக் காளாகி யிருக்கிறார். ஒன்றையும் அவர் இலட்சியம் செய்வதில்லை.

இவர் செய்திருக்கும் முக்கியமான காரியங்களில் ஒன்று, ஓவியா என்னும் தீவை விலைக்கு வாங்கி அதை "மதுவிலக்குத் தீவு" ஆக்கிய தாகும். இங்கிலாந்திலேயே இந்த ஓரிடந்தான் பூரண மதுவிலக்குச் செய்த இடம். குடியைவிட நினைத்தும், பக்கத்தில் கடை இருப்பதால் அப்படிச் செய்யமுடியாமல் இருந்த பலர், இத் தீவுக்கு வந்து கள்ளின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலை யடைந்திருக்கிறார்கள்.

'தோல்வியாம்!

'அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் தோல்வியடைந்து விட்டதாம்!—இந்த முழுப் பொய்யை அயல்நாட்டு மது வியாபாரிகள் பரப்பி வருகிறார்கள். இதையே நமதுகலால் மந்திரிகளும், பிற உத்தியோகஸ்தர்களும், இவர்களுடைய தயவை விரும்பும் வேறு சில பெரிய மனிதர்களும் கிளிப்பிள்ளைபோல் ஒப்புவிக்கிறார்கள்.

சிறிது ஆலோசித்துப் பார்ப்போம். மதுவிலக்கு அமெரிக்காவில் தோல்வியடைந்து விட்டதென்று எப்போது சொல்லலாம்? சிலரோ, பலரோ, சட்டத்தைமீறிக் குடிப்பதினாலேயே அது தோல்வியடைந்த தென்று ஏற்படாது. அப்படியானால் இந்த நாட்டில் சர்க்கார் ஏற்படுத்தி யிருக்கும் ஒவ்வொரு சட்டமும் தோல்வியடைந்த தென்றே ஏற்படும்.

ஒன்று, சட்டத்தினால் எதிர்பார்த்த நன்மைகள் விளையாமலோ, நன்மைகளைவிடத் தீமைகளே அதிகமாய் விளைந்தோ இருக்கவேண்டும். அல்லது பொது ஜனங்களிடையே அச்சட்டத்தின் செல்வாக்குக் குறைந்து நாளுக்குநாள் அதை எதிர்ப்போரின் தொகை அதிகமாகி வரவேண்டும். இவ்விரண்டிலொன்று நேர்ந்திருந்தால் சட்டம் தோல்வியடைந்த தென்று ஒருவாறு தீர்மானிக்கலாம். ஆனால் உண்மையென்ன?

ஆதரவு வளர்கிறது

ஆரம்பத்தில் மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றிச் சந்தேகப்பட்டவர்கள் எல்லாம் இப்போது அதன் நன்மைகளைக் கண்ட பின்னர் மனப்பூர்வமாய் ஆதரிக்கிறார்கள். நியூயார்க் நகரைச் சேர்ந்த கிறிஸ்துவ பூஜை யதிகாரியும் குருக்களுமான பிஷப் வில்லியம் மானிங் சொல்கிறார் :—

"மதுவிலக்குச் சட்டம் நிறை வேற்றியபோது நான் அதற்குச் சாதகமாக வாக்களிக்கவில்லை. கொஞ்சகாலம் வரையில் அதன் உசிதத்தைப் பற்றி எனக்கு மிக்க சந்தேகம் இருந்தது. ஆனால் நான் சொந்தமாகப் பார்த்தும் விசாரித்தும் தெரிந்துகொண்டதிலிருந்து, நமது

ஜனங்களுக்கு அதனல் மிகவும் நன்மை விளைந்திருக்கிறதென இப்போது உணர்கிறேன். நாளடைவில் இன்னும் மகத்தான நன்மை விளையப் போகிற தென்றும் நிச்சயம் கொண்டுள்ளேன்."

பிஷப் மானிங்கைப் போல் இன்னும் எத்தனையோ பேர் இவ்வாறு தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண் டிருக்கிறார்கள்.

அமெரிக்கா, ஒஹையோ மாகாணத்தில் முதன்முதலாக 1914-ம் வருஷத்தில் மதுவிலக்குச் சட்டத்தை முக்கிய பிரச்னையாகக் கொண்டு தேர்தல் நடந்தது. சட்டத்துக்குச் சாதகமான வாக்குகளைவிடப் பாதகமான வாக்குகள் 84, 152 அதிகமிருந்தன. ஆனல் 1922-ம் வருஷத்தில் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது.

வருஷம்	பாதகம் (அதிக வாக்குகள்)	சாதகம் (அதிக வாக்குகள்)
1914	84,152	
1915	55,408	
1917	1,307	
1918		25,759
1919		41,853
1922		189,472

சட்டம் நிறைவேறி அமுலுக்குவந்த சிறிது காலத்தில் அதற்கு ஆதரவு எவ்வளவு பெருகிவிட்டது பாருங்கள்! எல்லா மாகாணங்களிலும் இதே நிலைமைதான். முதலில் மதுவிலக்குச் சட்டத்திற்கு விரோதமா யிருந்த மாகாணங்களும் சில வருஷ காலத்தில் அதைப் பூரணமாய் ஆதரிக்கத் தொடங்கிவிட்டன. அமெரிக்காவில் அரசாங்க சபைகள் இரண்டு உண்டு. ஒரு சபையில் மொத்தம் 96 அங்கத்தினர்கள். தற்போது இவர்களில் 80 பேர் மதுவிலக்கை ஆதரிப்பவர்கள்; 16 பேர் தான் அதை எதிர்ப்பவர்கள்.

மற்றொரு சபையில் 320 பேர் மதுவிலக்குக் கட்சியினர்; 106 பேர் அச் சட்டத்தைத் தளர்த்தலாமென்று சொல்லுபவர்கள்.

விளைந்த நன்மைகள்

இவ்வாறு நாளுக்குநாள் மதுவிலக்குக்கு ஆதரவு பெருகி வருவதின் காரணமென்ன? நன்மையில்லாத ஒரு சட்டத்துக்கு எங்கேயாவது ஆதரவு பெருகுமா? மது வியாபாரிகள் எவ்வளவோ பிரமப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். பத்திரிகைகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் லஞ்சம் கொடுத்தும், பொய்ப் பிரசாரம் செய்தும் பெருமுயற்சி செய்கிறார்கள். அப்படியும் அச்சட்டம் நாளுக்குநாள் பலம்பெற்று வருவது என்ன காரணம்?

"அமெரிக்கர்கள் சராசரி சேவிங்ஸ் பாங்கியில் போட்ட பணம் 1916-ம் வருஷத்தில் 90 டாலர். 1925-ம் வருஷத்தில் இது 188 டாலராயிற்று" என்று அமெரிக்க பாங்கிக்காரர்களுடைய சங்கத்தார் வெளியிட் டிருக்கிறார்கள்.

"அமெரிக்கர்களின் சராசரி தலாவருமானம் 1918-ம் வருஷத்தில் இருந்ததைப்போல் 100-க்கு 40 மடங்கு 1926-ல் அதிகமாயிற்று" என்று தேசியப் பொருளாதார ஆராய்ச்சி சபையார் கூறி யிருக்கிறார்கள்.

சமீபத்தில் அமெரிக்க அரசாங்க சபைகளினால் மதுவிலக்குச் சட்டத்தின் பலாபலன்களைப் பற்றி விசாரணை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அக் கமிட்டியார் அரசாங்கத்துக்கு சமர்ப்பித்த அறிக்கையில் கூறுவதாவது :—

"நமது தற்போதைய செல்வப் பெருக்கிற்கு முதன்மையான காரணங்களில் ஒன்று மதுவிலக்குச் சட்டம் என்பதாய்ப் பொருளாதார நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்."

"வறுமை மிகக் குறைந்திருக்கிறது. அதை அநுசரித்துத் தொழிற்சாலைகளில் சாமான் உற்பத்தி அதிகமாகி யிருக்கிறது ; தொழில் விபத்துகள் குறைந்திருக்கின்றன ; புது வீடுகளுக்கும் மற்ற சுகவாழ்வு வசதிகளுக்கும் தேவை அதிகமாகி யிருக்கிறது."

"உலக முழுவதிலும் சேர்ந்து சேவிங்ஸ் பாங்கியில் பணம் போட்டிருக்கிறவர்கள் தொகை எவ்வளவோ, அதில் மூன்றில் ஒரு பங்கு பேர் அமெரிக்காவில் உளர்."

"மதுவிலக்குச் சட்டத்துக்குப் பின்னர் அமெரிக்காவில் சேவிங்ஸ் பாங்கியில் பணங் கட்டுவோர் தொகை 100க்கு 400 வீதம் பெருகி யிருக்கிறது."

"மதுவிலக்குச் சட்டத்தினால் மரண விகிதம் மிகக் குறைந்து விட்டது. சென்ற ஐந்து வருஷத்தில் பத்து லட்சம் உயிர்கள் அதனால் காப்பாற்றப்பட் டிருக்கின்றன வென்று மதிப்பிடப் படுகிறது."

"பெரிய நகரங்களில் தொழிலாளிகள் வசித்துவந்த நரகம்போன்ற சேரிகள் அநேகமாய் மறைந்து விட்டன. இதற்குமுன் எப்போதும் இல்லாத அளவில் புது வீடுகள் ஏராளமாய்க் கட்டப்பட்டு வருகின்றன. இதற்குமுன் வாடகை கொடுத்துக் குடியிருந்தவர்கள் பலர் இப்போது சொந்த வீடு கட்டிக் கொண்டார்கள்."

"மதுவிலக்குச் சட்டத்தின் பயனாகத் தொழிலாளிகளின் வாழ்க்கை நிலை உயர்ந்து விட்டதால் எல்லாத் தொழில்களும் அபிவிருத்தி யடைந்திருக்கின்றன."

"மது வியாபாரத்தில் நஷ்டமான அரசாங்க வருமானம் வேறு தொழில் வரிகள் அதிகம் வருவதால் ஈடுசெய்யப் படுகிறது. மோட்டார் வண்டிகளில் மட்டும் சென்ற வருஷம் 47 கோடி டாலர் வரிவசூல் ஆயிற்று."

"மதுவிலக்குக்குமுன் இருபது வருஷகாலத்தில் எப்போது மிருந்ததைக் காட்டிலும் அமெரிக்காவின் தர்ம சாலைகளிலுள்ள பிச்சைக்காரர்கள் இப்போது கொஞ்சம்."

"ஏற்கனவே குடியால் கெட்ட குடும்பங்களுக்கு உதவி செய்து வந்த பல தர்ம ஸ்தாபனங்கள், இப்பொழுது அந்த நிதியிலிருந்து மொத்தத்தில் வருஷந்தோறும் 7 கோடி 40 லட்சம் டாலர் எடுத்து வேறு நல்ல காரியங்களுக்குச் செலவிட்டு வருகின்றன."

"பல சிறைச்சாலைகள் மூடப்பட் டிருக்கின்றன. சில மாகாணங்களில் சிறைகளை விற்றே விட்டார்கள்."

"மதுவிலக்குக்கு முன் மூன்று வருஷத்து நிலைமையையும், மதுவிலக்குக்குப் பின் மூன்று வருஷத்து நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அதிக குடியினால் ஏற்பட்டுவந்த பைத்தியங்கள் 100க்கு 66 வீதம் குறைந்துபோயின."

"மதுவிலக்குச் சட்டத்தைத் திறமையாக நடத்தி வைப்பதற் குரிய சாதனங்கள் இன்னும் பூரணமாக வில்லை. இதற் குள்ளாகவே இவ்வளவு நன்மைகள் விளைந்திருக்கின்றன வென்றால், மாகாண அரசாங்கங்கள் சட்டத்தைத் திறம்பட அமுல் நடத்தும்பட்சத்தில் எவ்வளவு நல்ல பலன்கள் ஏற்படுமென்று சொல்ல வேண்டியதில்லை."

அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் தோல்வி யடைந்து விட்டதாவென்று இப்போது சொல்லுங்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பொக்கிஷ மந்திரி கனம் பிலிப் ஸ்னோடன் சொல்கிறார்:—"மதுவியாபாரத்தை ஒழித்துவிட்டு அதில் கிடைத்த வருமானத்திற்குப் பதிலாக வேறு வரி போட்டு வசூலிக்கவேண்டிய பொறுப்பை எனக்கு அளித்தால் சிறிதும் கவலை யென்பதின்றி நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வேன்." வருமானம், வருமானம் என்று அழும் நம்மவர்கள் இதைக் கவனிக்கவேண்டும்.

மோட்டாரில் கள்ளு

"சர்க்கார் கள்ளு வியாபாரம் செய்யாவிட்டால் ஜனங்கள் இரகசியமாய்க் கள்ளு உற்பத்திசெய்து குடிப்பார்கள். அதனால் தான் பூரண மதுவிலக்குச் செய்யவில்லை" என்று ஒரு சாக்கு சொல்லப் படுகிறது. இது உண்மையான காரணமானால், கள்ளு உற்பத்தி செய்யக் கூடிய மரங்களே இல்லாத இடங்களிலாவது மதுவிலக்குச் செய்யலா மல்லவா? ஆனால் தற்போது இதற்கு நேர் விரோதமாக, கள்ளு உற்பத்திக்கு வசதியே யில்லாத பிரதேசங்களில்கூடப் பெரிய மோட்டார் வண்டிகளில் கள்ளு எடுத்துக் கொண்டுபோய் விற்று வருகிறார்கள். இதை அரசாங்கம் ஆதரித்து வருவதோடு, இதற்குவேண்டிய சௌகரியங்களும் செய்து கொடுத்திருக்கிறது. மற்ற மோட்டார் வண்டிகள் எல்லாம் ஜில்லா போர்டுக்குச் சுங்கப் பணம் கொடுக்கவேண்டும்; கள்ளு ஏற்றும் மோட்டார் வண்டிமட்டும் சுங்கம் கொடுக்க வேண்டியதில்லை!

அனந்தபூர் ஜில்லாவின் சர்க்கார் மதுவிலக்குப் பிரசாரக் கமிட்டியார் இந்த அநியாயத்தைப் பற்றி ஒரு நல்ல தீர்மானம் செய்திருக்கிறார்கள். இக் கமிட்டியின் தலைவர் திவான்பகதூர் பி. கேசவப்பிள்ளை சி. ஐ. இ. அவர்கள். அனந்தபூர் ஜில்லாவின் சுகாதார உத்தியோகஸ்தர் இக்கமிட்டிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் அவர் குறிப்பிட்டிருந்தது:—"கள்ளு அகப்படாத இடங்களில் மோட்டார் வண்டிகளில் கள்ளைக் கொண்டுவந்து விற்கும் வழக்கத்தை நிறுத்த வேண்டுமென்று சிபார்சு செய்யலாம். கள்ளு இல்லாவிட்டால் ஜனங்கள் குடிக்க முடியாதாகையால் மேற் சொன்ன வழக்கத்தை நிறுத்தினால் மதுபானத் தீமை பெரிதும் குறைந்துபோகும்."

இந்தக் கடிதத்தைப் படித்து அதன்மேல் மேற்படி ஜில்லா பிரசாரக் கமிட்டியார் தீர்மானம் செய்திருப்பது:—"கள்ளு கிடைக்காத இடங்களில் குத்தகைக் காரர்கள் வெகு தூரத்திலிருந்து, ஜில்லாவிட்டு ஜில்லாவுக்குக்கூட, மோட்டார் வண்டிகளில் கள்ளு கொண்டுவருவதற்கு வசதி செய்து கொடுத்திருப்பதினால் பெருந்தீமை விளைந்திருக்கிறது. பொறுப்புள்ள உத்தியோகஸ்தர்கள், உத்தியோகப் பற்றற்றவர்கள் எல்லாரும் இவ்வாறு அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். இவ்வழக்கத்தினால் கலால் வருமானம் அதிகமானாலும், குடித் தீமையை இது பெரிதும் வளர்த்து ஜனங்களுடைய பொருளையும், ஒழுக்கத்தையும் அழித்து

வருகிற தென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆகையால் இவ் வழக்கத்தை நிறுத்திவிட வேண்டும்."

இத் தீர்மானத்தின் மேல் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்? கள்ளு மரமே இல்லாத இடங்களில் மட்டுமல்ல; ஓரிடத்தில் மதுவிலக்கு உணர்ச்சியின் பயனாக ஜனங்கள் கள்ளுக்கு மரங்கொடுக்க மறுத்தால், சர்க்கார் இவ்வுணர்ச்சியைப் பாராட்டி அவ்விடத்துக்கு வேறிடங்களி லிருந்து கள்ளுக் கொண்டு வருவதைத் தடுக்க வேண்டாமா? இவையேனும் உடனே செய்யாதிருக்கும் வரையில் சர்க்கார் மதுவிலக்குப் பிரசாரம் வெறும் மோசடியேயாகும் அல்லவா?

மதுவிலக்குச் சங்கத்தின் பொதுக் கூட்டம்

அகில இந்திய மதுவிலக்குச் சங்கத்தின் பொதுக் கூட்டம் இரண்டு வருஷத்துக் கொருமுறை நடைபெற வேண்டியது. சென்ற முறை 1928-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் ஸர் புருஷோத்தம தாஸ் தாகூர் தாஸ் தலைமையில் டில்லியில் இக் கூட்டம் நடந்தது. இவ்வருஷம் சென்னையில் ஏப்ரல்மீ 19உ பொதுக் கூட்டம் நடத்தத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இக்கூட்டத்தின் நட வடிக்கைகளில் கலந்து கொள்ளப் பின் வருவோர் உரியவர்களாவார்கள் :—

1 மதுவிலக்குச் சங்கத்துடன் இணைக்கப் பெற்ற கிளை ஸ்தாபனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள். (ஒவ்வொரு ஸ்தாபனமும் குறைந்த பட்சம் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கலாம். ஐம்பது அங்கத்தினருக்கு மேற்கொண்ட கிளை ஸ்தாபனங்கள், நூறு அங்கத்தினருக்கு ஒருவர் வீதம் அதிகப்படியாக அனுப்பலாம்.)

2. மது விலக்குச் சங்கத்தின் போஷகர்கள்.

3. சாசுவத அங்கத்தினர்கள்.

4. புதிய விதியின்படி வருஷம் ஐந்து ரூபாய் கட்டணம் செலுத்தும் சாதாரண அங்கத்தினர்கள்.

மது விலக்கு இயக்கத்தின் பிற அபிமானிகள் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு விடப்படுவார்கள்.

சென்னையில் கூட்டம் நடக்கும் இடமும் மற்ற ஏற்பாடுகளும் ஏப்ரல் மாத ஆரம்பத்தில் தினசரிப் பத்திரிகைகளில் வெளியிடப் படும். பிரதிநிதிகளாகவோ, நடவடிக்கைகளைக் கவனிக்கவோ வர விரும்புவோர் முன்னாலேயே சங்கத்தின் காரிய தரிசிக்கு எழுதித் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஸ்தல ஸ்தாபனங்களின் ஆதரவு

பூரண மதுவிலக்கை ஆதரித்து, தத்தம் எல்லைக்குள் இருக்கும் கள்ளு சாராயக் கடைகள் எல்லாவற்றையும் உடனே மூடிவிட வேண்டு மென்று வற்புறுத்தித் தீர்மானம் நிறைவேற்றிய ஸ்தல ஸ்தாபனங்களின் ஜாபிதா நமது மார்கழி, தை இதழ்களில் வெளியிட் டிருந்தோம். அதன் பின்னர் இன்னும் சில ஸ்தாபனங்கள் அத்தகைய தீர்மானம் நிறை வேற்றி யிருக்கின்றன. அவை எல்லாவற்றின் பெயர்களையும் இங்கே தொகுத்து வெளியிடுகிறோம் :—

தாலூகா போர்டுகள் 31 : மன்னார்குடி, நன்னிலம், நாமக்கல், பீமாவரம், குளித்தலை, மாயவரம், சேரமாதேவி, தர்மபுரி, விருத்தாசலம், தனுக்கு, பொன்னூணி, திருப்பத்தூர், உசிலம்பட்டி, தேவ கோட்டை, ஆத்மகூர், ஓங்கோல், புரோதத்தூர், கர்னூல், சிவகாசி, தோன், திண்டி வனம், கோயமுத்தூர், கரூர், புத்தூர், கனிகிரி, ரேபல்லி, வள்ளுவநாடு, நரச பட்டணம், விசாகப் பட்டினம், பாலக்காடு, மங்களூர்.

ஜில்லா போர்டுகள் 3 : மேற்கு கோதாவரி, தென்னாற்காடு, கடப்பை.

நகர சபைகள் 10 : விஜயநகரம், பாலக்காடு, திருப்பத்தூர், மாயவரம், சித்தூர், ஹிந்துபூர், மன்னார்குடி, திருச்சினாப்பள்ளி, பர்ஹம் பூர், பர்லாகிமிடி.

பூரண மதுவிலக்கு உடனே செய்ய வேண்டுமென்று வற்புறுத்தா மல் பொதுவாக மது விலக்கை ஆதரித்துப் பின்வரும் ஸ்தாபனங்கள் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கின்றன :—

கும்பகோணம், ஸ்ரீரங்கம் நகர சபைகள் ;

சித்தூர் ஜில்லா போர்டு ;

காஸர்கோட், நரசராவ் பேட்டை, ஜம்மலமடுகு, கார்வேடி நகரம் தாலூகா போர்டுகள்.

———

அரசாங்கக் கணக்கு

சென்னை அரசாங்கத்தின் வரவு செலவு அங்கத்தினர், ஸர் தாமஸ் மாயர், இவ்வருஷத்திய வரவு செலவு திட்டத்தைப் பிரேரணை செய்து பேசியபோது, நமது மாகாணத்தில் சென்ற வருஷம் போட்ட திட்டத்தை விடக் கலால் வருமானம் 42 லட்சம் அதிகம் வந்திருக்கிறது என்று தெரிவித்தார். இதற்கு அவர் கூறிய காரணம் மிக்க விநோதமானது. வயல்கள் நன்ருய் விளைந்து நாடு செழித்த படியால், குடியானவர்கள் குடியில் அதிக பணம் செலவழித்திருக்கிருர்க ளென்பது அவருடைய ஊகம்!

கலால் வருமானம் அதிகமாவதைக் கொண்டு நாட்டின் செழிப்பைத் தீர்மானிப்ப தென்ருல் இந்தியா தேசம் சென்ற முப்பது வருஷத்தில் ஐந்து மடங்கு அதிக செழிப்பு அடைந்திருக்கிறது என்று தீர்மானிக்கவேண்டும். ஏனென்ருல் 1901-ம் வருஷத்தில் இந்தியாவின் கலால் வருமானம் 5 கோடி ரூபாய்; இவ்வருஷத்தில் ஏறக்குறைய 25 கோடி ரூபாய்!

கலால் வருமானம் அதிகமானல் குடி அதிகமாயிற்றென்று தீர்மானிக்கலாம். ஆனல் குடி அதிகமானதைக் கொண்டு ஜனங்களின் வருமானம் அதிகமாகி யிருக்க வேண்டுமென்று தீர்மானிப்பது சரியன்று. கணக்குப் பார்த்து வரவுக்குத் தகுந்த செலவு செய்யும் முறை குடிகாரனுக்கு ஏற்பட்டதல்ல! வயல் அடியோடு விளையா விட்டாலும் குடிகாரன் கடன்பட்டாவது குடிப்பான். புள்ளிக் கணக்குப் பார்ப்பானேன்? குடியர்கள் நாளுக்குநாள் அழிந்து வருவதைக் கண் முன்னே காண்கிருேம்.

ஸர் தாமஸ் மாயர் சொல்லுகிறபடி, சென்ற ஆண்டில் தேசம் சுபிட்சமா யிருந்ததென்றே வைத்துக் கொள்வோம். அதனல் குடியானவர்களுக்கு சொற்பம் மிஞ்சிய பணத்தைக் குடியில் தொலைக்கும்படி விடுவதுதான அரசியல் முறை? பஞ்ச காலத்திற்குச் சேர்த்து வைத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டாமா?

நமது நாட்டுக் குடியானவர்களின் வறுமை பிரசித்தியானது. சென்னை மாகாணத்திலேயே மிகச் செழிப்பான கிருஷ்ணா, கோதாவரி ஜில்லாக்களில் நிலத் தீர்வை உயர்த்துவது பற்றி யோசிக்க அரசாங்கத்தார் ஒரு கமிட்டி நியமித்தார்கள். அக்கமிட்டியார் குடியானவர்களின்

நிலைமையை ஆராய்ந்து இனி நிலவரி உயர்த்தினல் தாங்கமாட்டார்கள் என்று தீர்ப்புச் சொல்லி யிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்த தேசத்தின் ஜனங்கள் கையில் ஒரு காசு கிடைத்ததும் அதைக் கள்ளுக்குடியில் தொலைக்கும்படி விட்டிருப்பது தானு தர்மம்? இத்தகைய கொடிய வியாபாரத்தை உடனே தொலைத்துவிட வேண்டுமென்பதல்லவா இதிலிருந்து விளங்கும் உண்மை?

வரவு செலவு அங்கத்தினரின் பேச்சில் மற்றொரு முக்கியமான விஷயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். சென்னை மகாணத்தில் நிலவரியை இனிமேல் உயர்த்துவதற்கில்லை யென்றும், பூரண மதுவிலக்கு நிச்சயமாய் சட்டமாகியே தீரும் என்றும், கலால் வருமானம் முழுதும் போய் விடுமெனவே எதிர்பார்க்க வேண்டுமென்றும், ஆகையால் புதிய வரிகள் போடக்கூடிய துறைகளை ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்றும் சொல்லுகிறார்.

பூரண மதுவிலக்கு ஏற்பட்டே தீருமென்று இவர் ஒப்புக்கொண்டது சந்தோஷமான விஷயம். ஆனல் புதிய வரிபோடும் யோசனை தவறு. கலால் வருமானத்துக்கு ஈடு செய்யும் வழி அரசாங்கத்தின் வீண் செலவுகளைக் குறைப்பது தான்.

மாயர் துரையே ஒப்புக்கொள்கிறார்:—1924-ம் வருஷத்தில் சென்னை அரசாங்கத்தின் செலவு 13 கோடி 56 லட்சம் ரூபாய். இந்த வருஷத்தில் போட்டிருக்கும் உத்தேச செலவுத் திட்டம் 18 கோடி 62 லட்சம் ரூபாய். சென்ற ஐந்து வருஷத்தில் செலவு 5 கோடி ஏறி விட்டது! சமீபத்தில் ஏறிய செலவைமட்டும் குறைத்தாலும் கலால் வருமானத்துக்கு ஈடு செய்யலாம். இதைவிட்டுப் புதிய வரி போடவேண்டுமென்பது போகாத ஊருக்கு வழியே தவிர வேறில்லை.

இங்கிலாந்திலுள்ள ஆயுள் பாங்கிக்காரர்களெல்லாரும் சேர்ந்து பற்பல வகுப்பாருக்குள்ளும் நேரிடும் மரண விகிதத்தைப்பற்றி ஆராய்ச்சி நடத்தினர்கள். இதில் தெரியவந்ததாவது:—வருஷந்தோறும் சராசரியில் 61, 215 ஜனங்களுக்கு 1000 பேர் வீதம் சாகிறார்கள். குடியாத ஜனங்களைமட்டும் எடுத்துக்கொண்டு பார்த்தால் 61, 215 பேருக்கு 560 பேர்தான் சாகிறார்கள். குடிப்பவர்களை மட்டும் எடுத்துக்கொண்டால் அதே 61,215 பேருக்கு 1652 பேர் இறக்கிறார்கள். இதையே வேறு விதமாய்ச் சொன்னல் சராசரி மரணவிகிதம் 1000 பேரில் 15 பேர்; மதுபானம் செய்யாதவர்களுக்குள் 1000 க்கு 9; குடிப்பவர்களுக்குள் மரணவிகிதம் 1000 க்கு 26. எனவே மதுபானத்துக்கு "மரணபானம்" என்று பெயர் கொடுக்கலாமென ஒருவர் சொல்கிறார்.

கிறிஸ்துவர்களுக்கு

மதுப்பேயை ஒழிப்பதற்காக இந்தியாவில் கிறிஸ்துவர்கள் பலர் அல்லும்பகலும் உழைத்து வருகிறார்கள். இதற்காகப் பல ஸ்தாபனங்களும் அவர்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த ஸ்தாபனங்களில் மிகவும் முக்கியமானது மாதர் மதுவிலக்கு சங்கமாகும். இந்த சங்கத்திற்கு உலகமெங்கும் கிளை சபைகள் இருக்கின்றன. இந்தியாவில் பல இடங்களிலும் கிளைசபைகள் இருக்கின்றன.

இந்தியாவில் இந்த சங்கத்திற்குத் தலைமைப் பதவி வகிப்பவர் மிஸ் மேரி காம்பெல் என்னும் அம்மையார். சமீபத்தில் இவர் தமிழ் நாட்டுக்கு வந்து சென்னை, சேலம் முதலிய இடங்களில் பிரசங்கங்களும் செய்தார். இவரும் இந்த சங்கத்தைச் சேர்ந்த இன்னும் சில பெண் மணிகளும் இடைவிடாமல், சோர்வென்பதின்றி, இவ் வியக்கத்துக்காக எவ்வளவு பாடுபட்டு வருகிறார்களென்பதை அறிந்தவர் எவரும் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

இன்னும் கிறிஸ்துவக் குருக்கள்மார் பலரும், தனிப்பட்ட கிறிஸ்துவர்களும் மதுவிலக்கில் மிக்க சிரத்தைகொண்டு வேலைசெய்து வருகிறார்கள். தமிழ் நாட்டிலும் நமது வேலைக்குப் பல கிறிஸ்துவர்கள் துணை புரிகிறார்கள். இவர்களுடைய தொண்டைப் போற்ற நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

ஆனால் தேசம் மகத்தான போராட்டத்தில் இறங்கவிருக்கும் இந்தப் பரம முக்கியமான சந்தர்ப்பத்தில் நமது கிறிஸ்துவ நண்பர்களுக் கெல்லாம் ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். அதாவது 1921-ம் வருஷத்தில் அவர்கள் செய்த தவறை மீண்டும் செய்யக்கூடாது என்பதே.

அவ்வருஷத்தில் காந்தியடிகள் தலைமையில் எழுந்த ஒத்துழையாமை இயக்கம் மகத்தான தார்மிக இயக்கமாக உருக்கொண்டது. துன்மார்க்கங்களுக் கெல்லாம் தாயாகிய கொடிய மது வியாபாரத்தை ஒழித்து விடுவதென்று ஜனங்கள் கங்கணங் கட்டிக்கொண்டு எழுந்தார்கள். ஆனால் வருமானத்தையே பெரிதாய்க் கருதும் அரசாங்கத்தார் குறுக்கே வீந்து அடக்குமுறை தொடங்கினர். "குடித்துக் கெடாதே" என்று சொன்ன பாவத்துக்காகக் கணக்கற்ற தொண்டர்கள் சிறையி லிடப்பட்டார்கள். பலாத்கார மென்றும், பயமுறுத்த லென்றும் சாக்குச் சொல்லி

ஹிம்சை யென்பதையே அறியாத சாத்வீகத் தொண்டர்களைச் சிறைக்கு அனுப்பினுர்கள். முடிவில் இயக்கம் ஒடுங்கிற்று. அச்சமயத்தில் மது விலக்கில் சிரத்தை கொண்ட கிறிஸ்துவர்கள் எல்லாம் ஜனங்கள் பக்கம் நின்றிருந்தால் ஒருவேளை வேறு விதமாய் முடிந்திருக்கலாம். ஆனுல் அவர்கள் அப்படிச் செய்யவில்லை.

மறுபடியும் விரைவில் அத்தகைய நிலைமை ஏற்படலாம். இம் முறையேனும் நமது கிறிஸ்துவ நண்பர்கள் அதிகார அநீதியை தைரிய மாய் எதிர்த்து நிற்பார்களா வென்பது கேள்வி. நாம் வேண்டுவ தெல் லாம் பராபட்ச மற்ற நியாயமே யாகும். அரசாங்க அறிக்கைகளில் தொண்டர்களின் பலாத்காரத்தைப் பற்றி வரும் செய்திகளை அப்படியே நம்பி விடாமல், தாங்களே நேரில் ஆராய்ந்து அவர்கள் உண்மை யறிய வேண்டும். அரசாங்கம் செய்வது அநீதி யென்று அறிந்தால் தைரிய மாய் முன்வந்து கண்டிக்க வேண்டும்.

ஏசுநாதரின் அடியார்கள் இவ்வுலகிலுள்ள வேறு யாரையும் எஜமான ஞய்க் கொள்வதற்கில்லை. ஒரு பெரிய சன்மார்க்க இயக்கத்தை அர சாங்கத்தார் ஒடுக்க முயல்வார்களாஞல், உண்மை சமயத் தொண்டர்கள் அனைவரும் அவர்களை எதிர்த்தே தீரவேண்டும்; வேறு வழி இல்லை.

மேலத் தஞ்சாவூர் ஜில்லா சர்க்கார் மதுவிலக்குப் பிரசாரக் கமிட்டி யார் மேற்படி ஜில்லாவில் சில விடங்களில் கள்ளு சாராயக் கடைகள் எல்லா வற்றையும் மூடிப் பூரண மதுவிலக்கு செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறுர்கள். இதை யெல்லாம் பார்க்கும் போது, மதுவிலக்குப் பிரசாரக் கமிட்டியுடன் கிராம உத்தியோகஸ்தர் கள் கலந்துழைக்கக் கூடாதென்று சர்க்கார் உத்திரவு பிறப்பித் திருப் பதில் ஆச்சரிய மில்லையல்லவா?

*　　*　　*　　*

சாதாரணமாக இந்தியதேச சரித்திரம் மகா அலெக்ஸாண்டரின் படையெடுப்புடன் ஆரம்பிப்பது வழக்கம். இந்த அலெக்ஸாண்டர் என்ப வன் கிரேக்கநாட்டு மன்னன். இவன் தன் முப்பதாவது வயதிற்குள் தனக்குத் தெரிந்திருந்த உலகத்தில் பெரும் பகுதியை ஜெயித்தான். கடைசியாக அவன் இந்தியாவுக்கு வந்து பஞ்சாப்பில் சில பகுதிகளைக் கைப்பற்றிவிட்டுத் திரும்பிச் சென்றுன். போகும் வழியில் தன் 33-வது வயதில் அவன் இறந்துபோனுன். காரணம் என்ன? மதுபானந்தான் என்று சரித்திரம் சொல்கிறது. உலகமெல்லாம் ஜெயித்தவீரனையும் மது வென்றுவிட்டது!

கடற்கரைக் கிளிஞ்சல்

திருச்செங்கோடு பிரதேசத்தில் மூடிய கள்ளு சாராயக்கடைகளின் விவரம் சென்ற இதழில் அறிவித்திருந்தோம். அவைகளைத் தவிர நல்லூர் - கந்தம்பாளையத்திலுள்ள கள்ளுக்கடையும் மூடப்பட்டிருக்கிறது.

*　　*　　*　　*

"குடிக்கும் சுதந்திரத்"தைப் பற்றிப் பேசுவோர் தாமஸ் கார்லைல் என்னும் பெயர் பெற்ற ஆங்கில நூலாசிரியர் கூறுவதைக் கவனிக்க வேண்டும்:—"ஆஹா! சுதந்திர மனிதனே! உன்னை எவனும் அடக்க முடியாதென்று கர்வங் கொண்டிருக்கிறாய். ஆனால் இந்தக் கேவலமான சாராயப் பானை உன்னை அடக்கி வைத்திருக்க வில்லையா? மனிதன் எவனும் உன்னைக் கட்டளையிட முடியாது என்று கருதி இறுமாந்திருக்கிறாய். ஆனால் இந்த இழிந்த மதுக்குடம் உன்னை ஆட்டிவைக்கின்றதே! அதன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நீ ஓடவில்லையா? நீ எந்த எஜமானனுக்கும் அடிமைப்பட்டிருக்கவில்லை யென்று சந்தோஷிக்கிறாய். ஆனால் இந்தக் கேடுகெட்ட மதுபாண்டத்தின் கொத்தடிமையா யிருக்கிறாயே! ஆ! முழுமூடனே! நீயும் சுதந்திரம், சுயேச்சை என்று பிதற்றுகிறாயல்லவா?"

*　　*　　*　　*

ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் என்பவர் வங்கநாட்டு வைஷ்ணவர்களால் ஸ்ரீ கிருஷ்ணனின் அவதாரமாகக் கருதிப் போற்றப்படும் பெரிய மகான். இவருக்கு கௌரங்கர் என்னும் பெயரும் உண்டு. இவர் சுமார் 400 வருஷங்களுக்கு முன்னால் வங்கநாட்டில் தோன்றி பக்தி மதத்தைப்பரப்பியவர். ஒரு சமயம் இவர் தமது சீடர்களை நோக்கிப் பின்வருமாறு சொன்னாராம்:—"நீங்கள் சாலையோடு போய்க் கொண்டிருக்கையில் சாலையின் ஒருபுறத்தில் மதங்கொண்ட யானை ஒன்றையும், மற்றொரு புறத்தில் ஒரு கள்ளுக்கடையையும் கண்டால், யானையின் பக்கம் ஒதுங்கி அதனால் மிதிக்கப்பட்டுச் செத்தாலும் சாகுங்கள்; ஆனால் கள்ளுக்கடைப் பக்கம் மட்டும் செல்லவேண்டாம்."

*　　*　　*　　*

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மாஜி முதன் மந்திரி லாயிட் ஜார்ஜ் 1924-ம் வருஷத்தில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். அங்குள்ள நிலைமையை நன்கு ஆராய்ந்து அவர் சொன்னதாவது:—

"சென்ற மகாயுத்தத்தின் பயனாகப் பெரியலாபம் அடைந்த தேசம் அமெரிக்கா ஒன்றுதான். அந்த லாபம் பொன்னும் வெள்ளியும் அல்ல; மதுவிலக்கு! அமெரிக்காவின் மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி விரோத எண்ணத்துடனேயே அங்கு நான் சென்றேன். அச்சட்டத்தினால் அமெரிக்கா அழிந்து வருகிறதென்றும், முன்னைவிட அதிகமாய் அங்கே குடி பரவி யிருக்கிறதென்றும் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் நேரில்

பார்த்ததில் இது பெரும் பொய்யென்று தெரிந்தது. பெரும்பான்மையேரான ஜனங்கள் குடியை மறந்துவிட்டார்கள். பகிரங்க சாராயக்கடைகள் இனிவரப் போவதில்லை. அமெரிக்காவில் தற்போது வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு ஆளாகியிருப்பவர்கள் சிறைகாவலர்கள்தான். அமெரிக்கர்களின் குழந்தைகள் முன் எக்காலத்திலும் இவ்வளவு சந்தோஷமாய் வாழ்ந்ததில்லை. மதுவிலக்குச் சட்டம் குழந்தைகளுக்குத்தான் பெரிய அதிர்ஷ்டம்."

* * * *

அமெரிக்காவில் பிலாடெல்பியா நகரில் ஒரு தொழிலாளி எட்டு மணி நேரம் வேலைசெய்து பெறும் சம்பளம், லண்டனில் அதே வேலை செய்யும் தொழிலாளி பெற வேண்டுமானுல் 28 மணி நேரம் வேலைசெய்ய வேண்டுமாம். ஜெர்மனியிலுள்ள பெர்லின் நகரில் அதே வேலைசெய்பவன் 40 மணி நேரம் வேலைசெய்தால் தான் அவ்வளவு கூலி கிடைக்குமாம். பிரான்ஸு நாட்டில் பாரிஸ் நகரிலுள்ள தொழிலாளி 80 மணி நேரம் வேலைசெய்தால் தான் அவ்வளவு சம்பளம் பெறக்கூடுமாம். அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் இருக்கிறது; மற்ற நாடுகளில் அச்சட்டம் இல்லை. "அமெரிக்கத் தொழிலாளி ஒருவன் குடிக்கும் சுதந்திரம் பெறுவதற்காக மேற்சொன்ன பிற நாடுகளுக்குப் போவானு?" என்று ஓர் அமெரிக்கப் பத்திரிகை கேட்கிறது. ஒருநாளும் போகமாட்டான்; அதே காரணத்தினுல் தான் அவன் மதுவிலக்குச் சட்டத்தை ஆதரித்து நிற்கிறுன்.

* * * *

திருப்பூரைச் சுற்றியுள்ள இடுவம்பாளையம், சின்னுண்டி பாளையம், இடுவாய், கரைப்புதூர், முரட்டுப்பாளையம் என்னும் கிராமங்களில் கிராம காங்கிரஸ் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு நல்ல மதுவிலக்கு வேலை நடந்து வருவதாயும், பலரிடம் குடிப்பதில்லை என்று உறுதி மொழி வாங்கப்பட்டிருப்பதாயும் அறிகிறேம்.

* * * *

அகில இந்திய மதுவிலக்குச் சங்கத்தில் சென்ற மாதம் பின்வருவோர் அங்கத்தினரானுர்கள்:—

(16)	டாக்டர் எஸ். பி. ஷராப்,	டில்லி
(17)	பண்டித மன்மத நாத் தார்,	டில்லி
(18)	ஜனுப் ஸையது ஹுஸேன்,	மீரட்
(19)	ஸ்ரீமான் குமார கங்கானந்த ஸின்ஹ,	ஸ்ரீநகர்
(20)	,, எஸ். அவினுசிலிங்கம்,	கோயமுத்தூர்
(21)	,, க. பெ. சங்கரலிங்கம்,	விருதுநகர்

ஸ்காத்லாந்து நாட்டில் சிறைச்சாலைக் கமிஷன் ஒன்று விசாரணை நடத்தியது. இதன் தலைவராகிய லெப்டினண்ட் கர்னல் முக்கார்டி என்பவர் சொல்வது :—"குற்றங்களை உற்பத்தி செய்வதில் குடிக்கு இணையான சாதனம் வேறொன்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்கிறார். குற்ற உற்பத்திக்கு லைஸென்ஸு கொடுக்கும் சர்க்காரைப்பற்றி நாம் என்னவென்று சொல்வது ?

* * * *

ஜெர்மனியில் காக்கை வலிப்பு ரோகிகளுக்கென்று ஒரு பெரிய வைத்தியசாலை யிருக்கிறது. இதில் 2500 நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்யப்பட்டுவருகிறது. சமீபத்தில் கணக்கெடுத்தபோது இவர்களில் பாதிப்பேர் குடியினால் இந்த கதியடைந்தவர்க ளென்று தெரியவந்ததாம்.

* * * *

"சாதியை க்ஷீணிக்கச் செய்யும் நாலு பெரிய அபாயங்கள் மனித சமூகத்துக்கு உண்டு. அவை பிளவை, க்ஷய ரோகம், துன்மார்க்க நோய், மதுசாரம் என்பவை யாகும்."

—டாக்டர் கோர்ட்னி வீக்ஸ்.

இவைகளில் மதுசாரம் முதல் மூன்று அபாயங்களுக்கும் ஒரு துணைக்காரண மாகு மென்று மற்றும் பல அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள்.

* * * *

"நான் நெடுநாட்களாகப் பழகி வந்திருந்த கொடிய வழக்கத்தினின்றும் தங்கள் பத்திரிகை மூலமாக விடுதலையடைந்து விட்டதை சந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன். என்னையும் ஒரு சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்" என்று கரூரிலிருந்து ஒருவர் எழுதிச் சந்தா ரூபாய் ஒன்றும் அனுப்பியிருக்கிறார். பூனமல்லியிலிருந்து ஓர் அன்பர் "தங்கள் பத்திரிகையை வாசித்தபிறகு ஒரு குடிகாரனைக் குடியிலிருந்து நிவர்த்தி செய்தேன்" என்று எழுதுகிறார்.

* * * *

சேலம் ஜில்லா அர்பன் பாங்கியின் 9 வது கூட்டுறவு மகாநாடு ஆத்தூரில் சென்ற மாதம் 23உ நடைபெற்றது. இம்மகா நாட்டில் திவான் பகதூர் ஆர். ராமச்சந்திர ராவ் அவர்கள் கோரியபடி சேலம் ஜில்லாவில் மதுவிலக்குப் பிரசாரம் செய்வதற்காக பொதுநல நிதியிலிருந்து ரூ. 1500 கொடுக்கத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

* * * *

மதுசாரத்தினால் உடம்பு சுகமடைவது ஒருபோதும் நடவாத காரியம். இதுமட்டுமன்று. மிகக் கொஞ்சமாக அருந்தினாலும் மதுசாரத்தினால் தேக சுகம் கெடவே செய்யும். மதுபானம் செய்பவன் எவனும் பூரண தேகசுகத்துடன் இருக்கமுடியாது.

—ஸர் ஆண்ட்ரூ கிளார்க் (விக்டோரியா மகாராணியின் வைத்தியர்).

இங்கிலாந்தில் மது வியாபாரத்தைப் பற்றி ராயல் கமிஷன் விசாரணை நடத்திவருகிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதம சுகாதார உத்தியோகஸ்தர் ஸர் ஜார்ஜ் நியூமான் இக் கமிஷனர் முன்பு சாட்சி சொல்லுகையில் கூறிய தாவது :—" ஆங்கிலேய ஜனங்கள் குடிப்பது குறைந்து வருகிறது. அதனால் அவர்கள் அதிக தேக சுகமும் ஆயுள் விருத்தியும் அடைந்து வருகிறார்கள். குடிகாரர்கள் க்ஷய ரோகம், நிமோனியா சுரம் முதலிய நோய்களுக்கு எளிதில் இரையாவார்கள். சென்ற 200 வருஷத்திய கணக்கை எடுத்துப் பார்த்தால் இங்கிலாந்தில் குடி அதிகமான போதெல்லாம் மரண விகிதம் அதிகமாகி, குடி குறைந்த போதெல்லாம் மரண விகிதமும் குறைந் திருக்கிறது."

* * * *

சேலம் ஜில்லாவில் சில கிராமங்களில் கள்ளு சாராயக்கடை மூடுவதைப் பற்றி ரிவினியூ போர்டார் அரசாங்கத்துக்கு அனுப்பியிருக்கும் அறிக்கையில் பின்வருமாறு சொல்லி யிருக்கிறார்கள் :—

" திருச்செங்கோட்டிலும், காந்தி ஆசிரமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் நெசவுகாரர்கள், தாழ்ந்த வகுப்பார், மற்றும் கைத் தொழிலாளிகள் இவர்களிடையே கடைகளை மூடுவதற்குச் சாதகமான உணர்ச்சி அதிகம் இருக்கிறது. கலால் கமிஷனர் இவ்விடங்களுக்குச் சென்ற போது வழக்கமான குடிகாரர்கள் பலர் தங்களுக்குக் குடியை விட்டுவிட விருப்பமென்றும், ஆனால் பக்கத்தில் கடைகள் இருப்பதால் முடியாமலிருக்கிறதென்றும், கடைகளை மூடித் தங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். ஸ்திரீகள் எல்லாரும் கடைகளை மூட வேண்டுமென்று பலமாக வற்புறுத்திச் சொன்னார்கள்."

நாட்டில் எந்த இடத்தில் போய்க் கேட்டாலும் ஜனங்கள் இப்படித் தான் சொல்வார்கள். அரசாங்கத்துக்கு மனமிருந்தால் தேசத்திலுள்ள எல்லாக் கடைகளையும் மூடிவிடலாம்.

* * * *

சில தினங்களுக்கு முன்பு தினசரிப் பத்திரிகைகளில் பின்வரும் செய்தி வெளியாயிற்று :

" சூளை, குடிசைப் பறச்சேரியைச் சேர்ந்த தக்கை ஆறுமுகம் என்பவன், சூளை அஷ்டபுஜம் சாலையிலுள்ள கள்ளுக்கடையில் குடித்துவிட்டு அங்குள்ளவர்களுடன் சண்டை கிளப்பினான். ஒரு பெரிய கத்தியினால் கடையின் சொந்தக்காரன் கண்ணாயிரம் பிள்ளையைக் குத்திக் காயப்படுத்தினான். பிறகு கணக்குப் பிள்ளையைத் தாக்கி அவனிடமிருந்த 150 ரூபாய் பணத்தைப் பறித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான். வழியில் வியாஸர்பாடி போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த ஒரு கான்ஸ்டேபிள் அவனைக் கைதிசெய்ய முயன்றான். ஆறுமுகம் அவனையும் முகத்தில் குத்திக் காயப்படுத்தி விட்டு ஓடினான். பிறகு குன்னூர் சாலையிலுள்ள கள்ளு, சாராயக் கடைகளில் புகுந்து அங்கும் கலகம் செய்துவிட்டு எங்கேயோ ஓடி ஒளிந்து கொண்டான். கண்ணாயிரம் பிள்ளையும், கான்ஸ்டேபிளும் பெரிய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். கண்ணாயிரம் பிள்ளையின் நிலைமை மிகவும் கவலைக்கிடமா யிருக்கிறது."